அலகு 10

# அண்மைக்கால அறநெறிப் போக்குகள்

Q1LH19

## கற்றல் நோக்கங்கள்


- காந்தியடிகளின் அறக்கோட்பாடுகளை அறிதல்.
- சமய நல்லிணக்கத்தின் தேவையைப் புரிந்துகொள்ளுதல்.
- சுயமரியாதை இயக்கத்தின் நோக்கத்தை அறிந்துகொள்ளுதல்.
- சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான செயல்பாடுகளை தெரிந்துகொள்ளுதல்.
- இராணுவ அறத்தின் இன்றியமையாமையை தெரிந்துகொள்ளுதல்.
- இன்றைய உலகில் பெண்ணியத்தின் முக்கியத்துவத்தை அறிதல்.

### நுழைவு வாயில்

அண்ணல் காந்தியடிகளின் அறக்கோட்பாடுகளான உண்மை, அகிம்சை, சத்தியம், சர்வோதயம் ஆகியன விளக்கப்படுகின்றன. அவரின் சமுதாய அறம், சமயநெறி, சமய நல்லிணக்கம் ஆகிய கருத்துகளும் கூறப்பட்டுள்ளன. மனிதநேயம் – வரையறை, வள்ளலாரின் அறவாழ்வு, சுயமரியாதை இயக்கம் தோற்றுவித்த பெரியாரின் அறஞ்சார் குறிக்கோள்கள் ஆகியவையும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. சூழலியல் அறம், இராணுவ அறம், விலங்கு நல அறம் சார்ந்தும் பெண்ணிய அறம் சார்ந்த கருத்துகளும் முன்வைக்கப்படுகின்றன.

### காந்திய அறம்

இந்தியாவில் தோன்றிய சமூகச் சீர்திருத்தவாதிகளுள் குறிப்பிடத்தக்கவர் காந்தியடிகள். இவர் உண்மை, அகிம்சை ஆகியவற்றைத் தம் வாழ்வின் அனைத்து நிலைகளிலும் பின்பற்றி வெற்றி கண்டவர். இவற்றின் மூலம், இந்தியாவை ஒரு சிறந்த அகிம்சை நாடாக உலகறியச் செய்தார்.



மகாத்மா காந்தி

காந்திய அறக்கோட்பாடுகள் அனைத்திற்கும் அடிப்படையாக அமைவது 'உண்மை' மற்றும் 'அகிம்சை' என்ற இரண்டு அறநெறிகளே ஆகும். இந்தியா மட்டுமன்றி உலகமே வியக்கும்படி அன்பு, அகிம்சை, சத்தியம், தர்மம், தூய்மை, கடமை, தியாகம், எளிமை, புலனடக்கம், நம்பிக்கை போன்ற நற்பண்புகளைச் சிறுவயது முதற்கொண்டு வாழ்நாள் இறுதிவரை பின்பற்றியவர் காந்தியடிகள்.

அகிம்சை என்னும் அணுகுமுறையின் மூலம், சமூகப் பிரச்சனைகளுக்கு அறவழியில் தீர்வு கண்டார். அகிம்சைவழிப் போராட்டத்தின் மூலம் ஆங்கிலேயரிடமிருந்து இந்தியாவிற்கு விடுதலை பெற்றுத் தந்தார்.



Unit 10.indd 169 13-02-2020 20:56:38

## உண்மை

'அறிவியலுக்கு அடிப்படையானதும் முதன்மையானதும் உண்மையே' என்கிறார் காந்தியடிகள். உண்மையே கடவுள் என்றும் குறிப்பிடுகிறார். உண்மை என்பது அனைவரும் ஏற்கும் ஒன்றாகும். கடவுளை ஏற்காதோரும் உண்மையை ஏற்கின்றனர். உண்மை அன்றாட வாழ்வில் அனைவருக்கும் நன்மை பயப்பதாகும். கடவுளின் இயல்புகளாகிய இருப்புநிலை, உணர்வுநிலை, ஆனந்தம் என்பனவும் மாறாத உண்மைகளாகும்.

**உங்களுக்குத் தெரியுமா?**

அரிச்சந்திரன் உண்மைக்காகவும் சத்தியத்திற்காகவும் அரசாட்சி, நாடு, அரண்மனை, மனைவி, மகன், செல்வம் என அனைத்தையும் இழந்து, பல சோதனைக்குட்பட்டபோதும் உண்மை பேசுவதைக் கைவிடவில்லை. இது சிறுவயதிலேயே காந்தியடிகளை மிகவும் கவர்ந்தது.

அன்பு அல்லது அகிம்சை மூலமாக மட்டுமே கடவுளை உணரலாம். மேலும், மனிதர்களுக்குச் செய்யும் தொண்டுகள் மூலமும் இறைவனைக் காணலாம் என்கிறார். மனிதர்களுக்குச் செய்யும் தொண்டே மனிதனை மனிதனோடு இணைக்கக்கூடிய செயலாகும். சமூகத் தொண்டுக்கு அப்பாற்பட்ட மகிழ்ச்சி என்பது இவ்வுலகில் இல்லை.

## அகிம்சை

தனிமனிதன் பிற உயிர்களுக்கு எண்ணம், சொல், செயல் ஆகியவற்றால் தீங்கு விளைவிக்காத செயலே 'அகிம்சை' ஆகும். காந்தியடிகளின் கருத்துப்படி சத்தியமும், அகிம்சையும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களாகும். அகிம்சை நெறியைத் தனிமனிதநிலை முதல் குடும்பம், சமுதாயம், நாடு என அனைத்து நிலைகளிலும்

**உங்களுக்குத் தெரியுமா?**

இருபதாம் நூற்றாண்டில் அமைதி வழிப் புரட்சி கண்டவர் காந்தியடிகள். அறம்பற்றிக் கூறும் காந்தியடிகளார் சமயத்தையும் ஆன்மீகத்தையும் அறத்துடன் இணைக்கின்றார். அறம் சமய அடிப்படை கொண்டது. தெய்வீகமானது – புலன் இன்பம் நாடாதது – வாழ்வுக்கு உயிரானது – தன்னலமற்றது – செல்வவிருப்பற்றது – தியாகம் செய்வது – பிறர்க்கென வாழ்வது என்பன காந்தியடிகளார் காணும் அறத்தின் அடித்தளங்களாகும்.

"அறிவியல் எண்ணங்கள் செயல்வடிவம் பெறாவிட்டால் பயனற்றதாகிவிடும். உடலாற்றல், அறிவாற்றல் இரண்டைக்காட்டிலும் ஒழுக்க ஆற்றலே உலகுக்கு நல்லது".

கடைப்பிடிக்க வேண்டும். அதற்கான ஆற்றல் ஒவ்வொரு மனிதனிடமும் உள்ளது. மனிதரைத் திருத்த வேண்டுமென்றால் அவர்மீது அன்பு செலுத்தி, அகிம்சை வழிநின்று திருத்திவிடலாம் என்கிறார் காந்தியடிகள். சமயங்களில் கூறப்படும் அகிம்சைக் கோட்பாடுகளுக்குக் காந்தியடிகள் புதிய விளக்கம் கண்டார்.

## சத்யாகிரகம்

சத்யம் + ஆகிரகம் = சத்யாகிரகம், சத்யம்-உண்மை, ஆகிரகம்-பற்றுதல். சத்தியாகிரகம் என்றால் உண்மையை உறுதியாகப் பற்றுதலாகும். மேலும், உண்மைக்காக அறவழியில் அமைதியாக எதிர்ப்பைத் தெரிவிப்பதுமாகும். உண்மையே கடவுளாக இருப்பதால் அறவழியில் போராடித் தீமையை வெல்லுவதே 'சத்யாகிரகம்' எனப்படுகிறது.

சத்தியாகிரகத்தைக் கடைப்பிடிப்பவர் தீமையை நன்மையின் மூலமும், கோபத்தை அன்பின் மூலமும், பொய்ம்மையை உண்மையின் மூலமும், வன்முறையை அகிம்சையின் மூலமும்

உங்களுக்குத் தெரியுமா?

மகாத்மா காந்தியடிகள் சத்தியாகிரகக் கொள்கையைக் கடைப்பிடித்து முதன்முதலில் வெற்றி கண்டது தென்னாப்பிரிக்காவில்தான். அந்த அறவழி வெற்றியே இந்திய விடுதலைப் போராட்டத்திற்கும் வித்திட்டது.

வெற்றி கொள்ளவேண்டும். அகிம்சை என்பது, கோழைகளின் ஆயுதமன்று; அது வீரம் உடையவர்கள் மட்டுமே கையாளக்கூடியதாகும். எளிமை, அமைதி, துறவு, தியாகம், புலனடக்கம், அன்பு, இரக்கம் ஆகிய பண்புகளை உடையவராகச் சத்யாகிரகி திகழவேண்டும். 'சத்யாகிரகியாகத் திகழ விரும்புபவர், தம் தேவைகளைக் குறைத்துக் கொள்ளவேண்டும். அனைத்து மனிதர்களையும் பாகுபாடில்லாது மதித்தும், சமய நல்லிணக்கத்துடனும் வாழ வேண்டும். அகிம்சை தனிமனித வாழ்க்கைக்கான நடத்தை மட்டுமன்று, அரசியல் மற்றும் சமூகப் பொருளாதார வாழ்வுக்கும் ஏற்புடையதாகும். இதுவே உலகப் பண்பாட்டிற்குக் காந்தியடிகளின் கொடையாகும்.

### சத்தியாகிரகத்தின் பண்புகள்

- கொண்ட கொள்கையில் பெருமையும், முயற்சியில் கண்ணியமும் கொண்டிருத்தல்.
- வெளிப்படையான எண்ணத்துடனும் திறந்த மனத்துடனும் செயலாற்றுதல்.
- எதற்கும் கலங்காது, அச்சத்தை வெற்றி கொள்ளும் திறன் பெற்றிருத்தல்.
- உண்மை ஈடுபாடும், செயலுறுதியும் கொண்டிருத்தல்.
- மனம், வாக்கு, செயல் இம்மூன்றையும் ஒருங்கிணைத்துச் செயலாற்றுதல்.
- தன்னடக்கம், பொறுமை, கடவுள் நம்பிக்கை முதலியவற்றைக் கொண்டிருத்தல்.
- அடக்கம், எளிமை, தியாக மனப்பான்மை ஆகிய அரிய குணங்களைப் போற்றுதல்.
- திருடாமை, பிறர் பொருளை விரும்பாமை, பிரம்மச்சரியத்தைக் கடைப்பிடித்தல்.


உங்களுக்குத் தெரியுமா?



தென்னாப்பிரிக்காவில் கருப்பர் இன மக்களின் விடுதலைக்காகப் பாடுபட்ட மார்டின் லூதர் கிங், காந்தியடிகளின் அகிம்சை நெறியைப் பின்பற்றி வெற்றி கண்டார்.

### சர்வோதயம்

'சர்வோதயம்' என்ற சொல்லின் பொருள் 'அனைவருக்கும் மேம்பாடு' என்பதாகும். ஒரு நாட்டிலுள்ள மக்கள் அனைவருக்கும், அனைத்தும் கிடைக்க வேண்டும் என்பதே சர்வோதயம் ஆகும். சமுதாயத்தில் கடைநிலையில் இருப்பவர்களும் கல்வி, அரசியல், பொருளாதாரம், சமூகம் மற்றும் சமயத் துறைகளில் ஏற்றம் பெற வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும். இக்கருத்தையே மேலை நாட்டு அறிஞரான ஹென்றி S.L. போலக் ஜான் ரஸ்கினின் "கடையனுக்கும் கடைத்தேற்றம்" என்ற நூல் வலியுறுத்துகிறது. இந்நூலைக் காந்தியடிகள் படித்ததன் மூலம் சர்வோதயத்தின் அடிப்படை உண்மைகளைத் தெரிவு செய்தார்.



ஹென்றி S.L. போலக் ஜான் ரஸ்கின்

"சர்வோதயம்" என்பது, "முழுமையான வளர்ச்சி" அல்லது அனைத்து நிலைகளிலும் மனிதன் அடையும் முழுவளர்ச்சி எனவும்



Unit 10.indd 171 13-02-2020 20:56:38

பொருள்படும். அனைத்துச் சமூகத்தினருக்கும் எல்லா வகை நலன்களையும் பெற்றுத் தருவதே சர்வோதயம் ஆகும். அனைத்துத் தொழிலுக்கும் சமமதிப்பு, எத்தொழிலையும் மதித்தல், அனைவருக்கும் உடல் உழைப்பு என்பன சர்வோதயக் கொள்கையின் சிறப்புக் கூறுகளாகும்.

## காந்தியடிகளின் சமுதாய அறங்கள்

நாட்டிலுள்ள அனைவரும் சகோதரர்களே. 'பிறப்பு' என்பது இனம், மொழி, சமயம், சாதி என்ற அனைத்தையும் கடந்த ஒன்று என்பதை அனைவரும் உணரவேண்டும். உண்மைக்குமுன் அனைவரும் சமம். எனவே, கடவுளுக்கு முன்பும் அனைவரும் சமம் என்ற காந்தியடிகளின் கருத்து சமுதாய ஒற்றுமைக்கு அடிப்படையானதாகும்.

ஆண்களுக்கு நிகராகப் பெண்கள் மதிக்கப்படவேண்டும். பெண்கள் அனைத்துத் துறையிலும் சம உரிமை பெறவேண்டும் என்பதில் இவர் உறுதியாக இருந்தார். மக்களின் உடல், உள்ளம், ஒழுக்கம், பொருள் ஆகியவற்றுக்கு மது ஊறு விளைவிப்பதால் மதுவிலக்கைக் கடுமையாக வலியுறுத்தினார். தொடக்கக்கல்வி, தாய்மொழியில் பயிற்றுவிக்கப்படவேண்டும் என்றார். கல்வி என்பது, பொருளாதாரத்திற்கு மட்டுமல்லாது, மாணவனின் உயிர், உடல், மனம் ஆகிய மூன்றின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருக்கும் என்றார். தொழிற்கல்விதான் நாட்டுக்கு நலன் தரும் என்றும் காந்தியடிகள் கருதினார்.

ஒரு நாட்டில் வாழும் மக்களிடையே பிறப்பாலோ, சாதி மற்றும் மதங்களாலோ வேறுபாடு இருப்பின், அது சமூக ஒற்றுமைக்கு ஏற்புடையதன்று. மனிதன் சக மனிதனை நேசிக்க எண்ணம், சொல், செயல் மூன்றும் ஒரே நேர்க்கோட்டில் ஒழுகவேண்டும்.

இயற்கையோடு இயைந்த எளிய வாழ்க்கையே இன்ப வாழ்க்கை என்பதைத் தாமும் உணர்ந்து, உலகிற்கும் காந்தியடிகள் உணர்த்தினார். ஒவ்வொரு மனிதனும் அறவழியில் நின்று, பிறரை வருத்தாது, தனது தேவைகளுக்கு ஏற்பப் பொருள் ஈட்ட வேண்டும். ஈட்டிய பொருளை அளவோடு செலவிட்டுப் பிறருக்கும் கொடுக்க வேண்டும். எளிய உணவு, எளிய ஆடை, எளிய வாழ்வு, எல்லாரிடத்தும் அன்பு எனக் காந்தியடிகள் எளிமையின் இலக்கணமாய் ஆசிரம வாழ்வு வாழ்ந்தார். அவர் தமக்குரிய வேலைகள் அனைத்தையும் தாமே செய்துகொண்டார். அவரின் எளிய வாழ்க்கைதான், அவருக்கு மகத்தான ஆற்றலைக் கொடுத்து, 'மகாத்மாவாக' அவரை உயர்த்தியது.

**உங்களுக்குத் தெரியுமா?**

**சமுதாயத்தின் ஏழு பாவங்கள்**
**(Seven deadly sins)**

1. உழைப்பில்லாத செல்வம்
(Wealth without work)
2. மனச்சான்றில்லாத மகிழ்ச்சி
(Pleasure without conscience)
3. பண்பில்லாத அறிவு
(Knowledge without character)
4. அறமில்லாத வணிகம்
(Business without morality)
5. மனிதநேயமில்லாத அறிவியல்
(Science without humanity)
6. தியாகமில்லாத சமயம்
(Religion without sacrifice)
7. கொள்கையில்லாத அரசியல்
(Politics without principle)

யங் இந்தியா 22.10.1925,
(மகாத்மா காந்தி)

## காந்தியடிகளின் சமயநெறி

காந்தியடிகள் சிறுவயதிலிருந்தே 'எம்மதமும் சம்மதம்' என்ற கொள்கையுடையவர். ஒருவருடைய சிக்கல்களுக்காக அனைவரும் கடவுளிடம் கூட்டுப் பிரார்த்தனை செய்யும்போது, அனைவரிடமும் ஒற்றுமையுணர்வு ஏற்பட்டு, அந்த ஒற்றுமையின் வலிமையால் கடவுளைக் காணலாம் என்ற கருத்து அனைவராலும் ஏற்கப்பட்டது. மனிதனிடமுள்ள விலங்குத்தன்மையைத் திருத்திச் சீர்செய்வதே 'ஒழுக்கம்' என்றும், அதைத் தருவது சமயம் என்றும் காந்தியடிகள் கூறினார். சமயத்தின் சாரமே ஒழுக்கம். 'சமயமில்லாத

வாழ்வு துடுப்பு இல்லாத படகு போன்றது' என்றும் கருதினார். வேத உபநிடதங்கள், மகாவீரர் அறிவுரைகள், பௌத்தப் பிடகங்கள், தோரா, பைபிள், திருக்குரான், கிரந்தசாகிப் போன்ற பல சமய புனித நூல்களில் உள்ள கருத்துகள், ஒரு சமயத்தவருக்கு மட்டுமே உரியவை அல்ல; உலக மக்கள் அனைவரும் கற்றுணர்ந்து பின்பற்ற வேண்டியனவாகும் என்றும் காந்தியடிகள் வலியுறுத்தினார்.

**உங்களுக்குத் தெரியுமா?**

மதங்களிடையே பல வேறுபாடுகள் இருந்தாலும், உண்மையைத் தவிர வேறு எதுவும் நிலைத்திருப்பதில்லை என்பதில் அனைத்துச் சமயங்களும் ஒன்றுபட்டுள்ளன. ஒவ்வொருவரும் தாங்கள் விரும்பிய சமயங்களில் இணைந்து அதற்குரிய வழிபாட்டு முறைகளைப் பின்பற்றி வாழ உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன.

## மகாத்மா காந்தியடிகளின் மணிமொழிகள்

- அன்பு, தன்னடக்கம் உள்ளவனிடத்தில் உண்மையைக் காணலாம்.
- ஆடை, அணிகலன்களில் அழகு இல்லை, உண்மையாகப் பணியாற்றுவதில்தான் அழகு உள்ளது.
- பிறரைத் தாழ்த்துபவன் எவனோ, அவன் பிறரால் தாழ்த்தப்படுவான்.
- உண்மையான அன்பு, தியாகம் பலனை விரும்பாது.
- இலட்சியத்திற்காக உழைப்பவனை யாராலும் வெல்ல முடியாது.
- நமக்குத் தெரிந்த உண்மைப்படி வாழ்ந்தால் போதும், நமது உண்மை எதுவென்று கடவுளுக்குத் தெரியும்.
- ஒழுக்கமில்லாத கல்வியால் பயன் ஏதும் இல்லை.
- ஐம்புலன்களை அடக்காமல், மனத்தை அடக்க முடியாது.

போன்றவை மகாத்மா காந்தியடிகளின் மணிமொழிகளில் போற்றத்தக்கனவாகும்.

## சமய நல்லிணக்கம்

சமய நல்லிணக்கம் அல்லது மத நல்லிணக்கம் (Religious harmony) என்பது, ஒரு நாட்டில் அவரவர் தங்கள் சமயத்தைப் பின்பற்றி வாழும்போது, பிற சமயம் சார்ந்த மக்களின் நம்பிக்கைகளையும் உணர்வுகளையும் மதித்து ஒருவருக்கொருவர் அன்பு செலுத்தி ஒற்றுமையுடன் வாழ்வதாகும். மக்களிடையே சமய நல்லிணக்கம் வளர, நமது அரசியல் அமைப்புச் சட்டம், மக்களுக்குப் பல உரிமைகளை வழங்கியுள்ளது. பல நூற்றாண்டுகளாகவே பல சமயத்தவர், பல இனத்தவர், பல மொழியினர், பல பண்பாட்டு மரபினர் வாழும் பன்மைச் சமூகமாகவே நம் நாடு திகழ்ந்து வருகிறது. பன்மைச் சமூகத்தில் சமய நல்லிணக்கம் இருந்தால் மட்டுமே அமைதியும், மகிழ்ச்சியும் நிலவும். எனவே, சமய நல்லிணக்கமே நம் நாட்டின் ஒற்றுமைக்கும் இறையாண்மைக்கும் வலுவான அடித்தளமாகிறது.

சமய நல்லிணக்கத்திற்குத் தடையாக இருப்பவை கொள்கை வேறுபாடுகள் அல்ல. சமயங்களுக்கிடையே காணப்படும் ஆதிக்க மனப்பான்மை, வெறுப்பு, பகைமை, பொறாமை, நம்பிக்கையின்மை போன்றவையாகும். இவற்றைக் களைய, மனிதர்களிடையே சமய சமரசம் வேண்டும்.

உலகிலுள்ள ஒவ்வொரு சமயத்தினரும் பிற சமயங்களின் கொள்கைகள், கோட்பாடுகள் மற்றும் தத்துவங்களைப் பற்றித் தெரிந்துகொண்டு அவற்றின் உணர்வுகளையும், உயர்ந்த பண்புகளையும் மதிக்கவேண்டும். ஒரு நாட்டில், 'மொழி, சமய, பண்பாட்டுப்பன்மை' இருப்பது என்பது தவிர்க்க முடியாததாகும். அவரவர் சமய உரிமைகளையும் நெறிகளையும் முறையாகப் பின்பற்றி வாழ்ந்துவந்தால் சமயப் பூசலற்ற சமத்துவச் சமுதாயம் உருவாகும்.

**உங்களுக்குத் தெரியுமா?**

இந்துக்கள் நாகூராண்டவர் மசூதிக்குச் செல்வதும்–வேளாங்கண்ணித்திருச்சபைக்கு செல்வதும் – பிற சமயங்களோடு கொண்டுள்ள சமய நல்லிணக்கத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

அனைத்துச் சமயங்களும் மனிதனுக்கு மிக உயரிய நிலையைக் கொடுத்துள்ளன. மனிதர்கள் அனைவரும் கடவுள் தன்மையை அடைய முடியும் என்பதை அனைத்துச் சமயங்களும் வலியுறுத்துகின்றன. இதையே காந்தியடிகளும் பரிந்துரைத்துள்ளர்.



இந்து திருக்கோயில்



நாகூர் தர்கா



வேளாங்கண்ணித் திருத்தலம்

சமயநல்லிணக்கம் சமூக நல்லிணக்கத்திற்கும், சமுதாய வளர்ச்சிக்கும் அடிப்படையாக உள்ளது. இதை நன்குணர்ந்த வள்ளலார், இராமகிருஷ்ணர், விவேகானந்தர், காந்தியடிகள் முதலானோர் சமய நல்லிணக்கத்தை வலியுறுத்தியுள்ளனர். சமய நல்லிணக்கம் என்பது, அனைத்துச் சமயங்களையும் உண்மையானதாக ஏற்கும் மனநிலையாகும். ஏனெனில், அனைத்துச் சமயங்களின் அடிப்படை உண்மைகளும் ஒன்றாகவே உள்ளன. அவற்றின் சடங்குகள், சம்பிரதாயங்கள் நடைமுறைகள் மட்டுமே வேறுபடுகின்றன. 'அனைத்துச் சமயங்களும் கடவுள் என்ற கடலைத் தேடிச் செல்லும் பல்வேறு நதிகள்' எனத் தாயுமானவர், வள்ளலார், இராமகிருஷ்ணர் எனப் பலரும் கூறியுள்ளனர். எனவே, சமய நல்லிணக்கம் இக்காலத்தின் தேவையாகும்.



இராமகிருஷ்ணர்



விவேகானந்தர்

**உங்களுக்குத் தெரியுமா?**

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களின் பிறந்த தினமான ஆகஸ்ட் 20, சமய நல்லிணக்க நாளாகக் கடைப்பிடிக்கப் படுகிறது.

'ஒரு மனிதன் எந்தச் சமயத்தைச் சார்ந்தவனாக இருந்தாலும், அவனை மகிழ்விப்பதும் அவனது பசிக்கு உணவளிப்பதும் துயர் துடைப்பதுமே மிகச்சிறந்த சமூகத் தொண்டு' என்று நபிகள் நாயகம் கூறுகிறார். எல்லாச் சமயங்களிலும் உள்ள நல்ல கருத்துகளை மக்களுக்கு எடுத்துரைத்து அவற்றை எல்லா மக்களும் பின்பற்றும் வகையில் அறியச் செய்வதால் உலகளாவிய சமத்துவமும் சகோதரத்துவமும் ஏற்படுவது உறுதியாகும். இதனால், சமய நல்லிணக்கம் மேம்படும் எனலாம்.

### மனிதநேயம்


பிற உயிர்கள்மீது அன்பு செய்தல், பரிவு காட்டுதல், மன்னித்தல், ஒற்றுமையைப் பேணல், பகைவனுக்கும் நன்மை செய்தல் போன்ற உயரிய பண்புகளை உள்ளடக்கியதே மனிதநேயம் ஆகும்.



Unit 10.indd 174 13-02-2020 20:56:39

இத்தகைய மனிதநேயப் பண்புகளைப் பண்டைய தமிழர்கள் தாங்கள் மேற்கொண்ட போர்முறை முதற்கொண்டு, பல்வேறு சமூக நெறிமுறைகளிலும் பின்பற்றினர். போர் அறங்களை மதித்துப் போற்றியது போலவே வாழ்வியல் அறங்களிலும் மனிதநேயத்தைப் போற்றிக் காத்தனர். இதற்குச் சங்க இலக்கியம் சான்றாகிறது.

### மனிதநேயம் - வரையறை



வடலூர் இராமலிங்க அடிகளார்

"வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என்று அனைத்து உயிர்கள் மீதும் பெரும்பரிவு காட்டினார் வள்ளலார். ஆறறிவு பெற்ற மனிதன், சக மனிதனிடம் மட்டுமல்லாமல் அனைத்து உயிரினங்களிடமும் கருணையோடும் அன்போடும் நடந்துகொள்வதே மனித நேயமாகும். மற்றவர்களுக்கு உதவுவதற்காகத்தன்னையே முழுமையாக ஒப்பளிக்கும் உயர்ந்த உள்ளமே மனித நேயத்திற்கு அடிப்படையாகும்.

உலகில் மனித நேயத்தைப் பற்றி அதிகம் பேசுவதைவிட, மனிதநேயமிக்க உலகாக இதை மாற்றுவதே நமது கடமையாகும்.

மனிதனின் சிக்கல்களையும் துன்பங்களையும் சகமனிதர்களால் மட்டுமே தீர்க்கமுடியும். நமது தமிழ்ப் பண்பாட்டைப் பொறுத்தவரையில் கணியன் பூங்குன்றனாரின் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பாடலில் உலகளாவிய மனிதநேயம் வலியுறுத்தப்படுகிறது.

தற்காலத்தில் நிகழும் பெரும்பாலான சமூகப் சிக்கல்களுக்கு மனிதநேயமே தீர்வாக அமையும்.

**உங்களுக்குத் தெரியுமா?**


வள்ளலாரின் கொள்கை சீவகாருண்யமும் ஆன்மநேய ஒருமைப்பாடுமே ஆகும். எல்லா உயிர்களுக்கும் எவ்வித வேறுபாடும் இன்றி இரக்கம் காட்டிச் சமமாகப் பாவித்து அன்புடன் ஒத்து வாழ்தல் வேண்டும் என்பதே வள்ளலார் காட்டிய வழியாகும். சமயவேறுபாடு, சாதிவேறுபாடு, வருணாசிரமம் ஆகியவற்றைக் முற்றிலும் வெறுத்து ஒதுக்கிய கருணையாளர் வள்ளலார். உலக உயிர்கள் அனைத்தையும் மனிதநேயத்தாலும் அருள் உணர்வாலும் ஒப்ப மதித்து ஒழுகிய சித்தர். சடங்குகளையும் சமயத்தின் பெயரால் நிகழும் பலியினையும் முற்றாகக் கண்டித்தவர். கண்மூடிப் பழக்கமெலாம் மண்மூடிப்போக புலாலைத் தவிர்க்கவேண்டும் என்று போதித்தவர். உயிர்களுக்கு இரக்கம் காட்டினால்தான் இறைவன் நம்மிடம் இரக்கம் காட்டுவான் என்று ஆன்மநேயம் கொள்ளச் செய்த ஆன்றோர். சமத்துவம் பேசிய சான்றோர். பசிபோக்கும் பேரறத்தை வலியுறுத்திய அருட்செல்வர். எல்லா உயிர்களிடத்தும் பரிவும் இரக்கமும் அன்பும் அருளும் படைத்தவர். இவர் மக்களின் நல்வாழ்வுக்காக ஏற்படுத்திய அமைப்புகளாவன:

1. சத்திய தருமச் சாலை
2. சத்திய ஞான சபை
3. சமரச சுத்த சன்மார்க்க சங்கம்.

குடும்ப உறவினர்களிடமும் மனிதநேயம் காக்கப்பட வேண்டும். குடும்பத்தில் வயதானவர்கள், குழந்தைகள், நோயுற்றவர்கள், மனவளர்ச்சி குன்றியவர்களிடத்தும் மனிதநேயத்தோடு நடந்துகொள்ள வேண்டும். குடும்பத்தில் மனிதநேயம் இல்லாதபோது சமூகத்திலும் மனிதநேயம் அற்றுப்போகிறது. எனவே, மனிதநேயம் குடும்பம், சமூகம், நாடு ஆகிய அனைத்திலும் பின்பற்றப்பட வேண்டும் என்கிறார் காந்தியடிகள்.

## சுயமரியாதை அறம்

பெரியார் ஒரு சிந்தனைக் களஞ்சியம், சமூகச் சீர்திருத்தச் செம்மல் ஆவார். கடவுள் மறுப்பு, பெண் விடுதலை, எழுத்துச் சீர்திருத்தம், தீண்டாமை ஒழிப்பு, எனப் பல பயனுள்ள சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தப் பெரியார் அரும்பாடுபட்டுள்ளார். மக்களிடையே சுயமரியாதை, சமத்துவம் மற்றும் சகோதரத்துவம் ஓங்கி வளர வேண்டும் என்பதே இவரின் உயிர் மூச்சாக இருந்தது.




தந்தை பெரியார்

ஒவ்வொரு சாதியும் முன்னேறவேண்டும் என்றில்லாமல், ஒட்டுமொத்தச் சமூகமும் முன்னேற வேண்டும் என்கிறார் தந்தை பெரியார். சமூகத்தில் உயர்வு, தாழ்வு நீங்கி உண்மையறிவு வளரவேண்டும். சமத்துவம் நிலைக்கவேண்டும். சமூக ஒற்றுமை வலிமை பெறவேண்டும். இதற்கு ஒவ்வொருவரும் சுயமரியாதையுடன் வாழவேண்டும் எனப் பெரியார் விரும்பினார். இதைச் சாதிப்பதற்காக உருவாக்கப்பட்டதே சுயமரியாதை இயக்கமாகும். இதுவே, பெரியாரின் உயிர்நாடியாக விளங்கியது.

மக்கள் உள்ளங்களில் நீங்காத இடத்தைப் பிடித்தவர் தந்தை பெரியார். இவர் மிகச்சிறந்த சமூகச் சீர்திருத்தவாதியாகத் திகழ்ந்தார். இவர் பல்வேறு காலக்கட்டங்களில் பல்வேறு சமூகச் சிக்கல்களுக்காக மிகுந்த துணிவுடன் போராடி வெற்றி கண்டு சமூக நீதியை நிலைநாட்டினார். தேசநலன் கருதித் தம் குடும்பத்தையே பல சமூகநீதிப் போராட்டங்களில் ஈடுபடுத்தினார். ஆதலால், இவர் 'சமுதாயச் சிற்பி' என்றும் அழைக்கப்பட்டார். இவரது துணிச்சலான போராட்டங்களுள் மிகவும் குறிப்பிடத்தக்கது 'வைக்கம்' போராட்டம். இவர் தமிழக மக்களுக்கு மட்டுமல்லாது, கேரளா வாழ் மக்களுக்காகவும் போராடிச் சிறை சென்று வெற்றி கண்டார்.

## வைக்கம் வீரர்

கேரள மாநிலத்தின் திருவாங்கூரில் உள்ள 'வைக்கம்' என்ற ஊரில் குறிப்பிட்ட வகுப்பைச் சார்ந்த மக்களுக்கு மட்டும், அவ்வூரின் முக்கிய வீதிகளில் நடப்பதற்கும் அங்குள்ள ஆலயங்களுக்குள்ளே சென்று வழிபடவும் அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. இதை அறிந்த தந்தை பெரியார் அங்குச் சென்று திருவாங்கூர் மன்னருக்கு எதிராகப் போராடி, அவ்வூர் மக்களின் உரிமைகளை மீட்டுத் தந்தார். சமூக நீதிக்காக மிகுந்த துணிச்சலுடன் மன்னரையே எதிர்த்துப் போராடி வெற்றி கண்ட இச்செயலைப் பாராட்டி இவருக்குத் திரு.வி.க. அவர்கள் 'வைக்கம் வீரர்' என்ற பட்டத்தை அளித்தார்.



திரு.வி.க

### உங்களுக்குத் தெரியுமா?



1938 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13 ஆம் நாள் சென்னையில் மறைமலை அடிகளின் மகளான திருமதி நீலாம்பிகை அம்மையார் தலைமையில் பெண்கள் மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டில் வைக்கம் வீரர் ஈ.வெ.ரா. அவர்கள் கலந்துகொண்டு பெண்ணுரிமைக்காக எழுச்சியுரையாற்றினார். இம்மாநாட்டின் இறுதியில் திருமதி நீலாம்பிகை அம்மையார் இவருக்குப் 'பெரியார்' என்ற பட்டத்தை வழங்கினார். அன்றுமுதல் அனைவராலும் பெரியார் என்றே அழைக்கப்படுகிறார்.



Unit 10.indd 176 13-02-2020 20:56:40

## சுயமரியாதை இயக்கம்

இந்த இயக்கத்தின் முக்கிய நோக்கம் சமூகத்தில் சமத்துவம் ஏற்படவேண்டும் என்பதாகும். கல்வி, உணவு, உடை, நீதி, வேலைவாய்ப்பு, பதவிகள் என அனைத்திலும் சமத்துவம் வேண்டும் என்பதே இக்கொள்கையின் மையக்கருத்தாகும். மனிதன் என்பவன் மானம் உள்ளவனே என்பதை உணர்ந்து, ஒவ்வொரு மனிதனும் சக மனிதனுக்கு மதிப்பளிக்க வேண்டும்; மக்களுக்குள் சமத்துவமும் சகோதரத்துவமும் ஓங்கி வளரவேண்டும்; மக்கள் அனைவரும் அறிவும் மரியாதையும் மிக்கவர்களாக வாழவேண்டும் என்றார் பெரியார். மனிதனாய்ப் பிறந்த ஒவ்வொருவனும் சுயமரியாதைக்கு உரிமையுடையவன் என்பது பெரியாரின் உறுதியான கருத்தாகும். சமூகத்திலுள்ள அடித்தட்டு மக்கள் அனைவரும் சுயமரியாதை பெற்றுத் தங்கள் உரிமையை நிலைநாட்டவேண்டும் எனப் பெரியார் கூறினார். தம் வாழ்நாளின் பெரும்பகுதியைச் சுயமரியாதை இயக்கத்திற்காகவே அவர் ஒதுக்கினார்.

## சுயமரியாதை இயக்கத்தின் நோக்கம்

சாதிப் பட்டங்களையும், சமய அடையாளக்குறிகளையும் மக்கள் விட்டொழிக்க வேண்டும். உரிய வயதுக்கு மேல்தான் பெண்களுக்குத் திருமணம் செய்யவேண்டும். மணமான பெண்களுக்கு 'மணவிலக்கு' செய்துகொள்ளும் உரிமை வேண்டும்; கைம்பெண்களுக்கு மறுமணம் செய்துகொள்ளும் உரிமை வேண்டும். பெண்களுக்குச் சொத்துரிமை, தொழில் நடத்த உரிமை, சிறுவர்களுக்குக் கட்டாயக் கல்வி, ஆசிரியர் பணியில் பெண்களை மட்டுமே நியமித்தல், தாய்மொழிக் கல்வி, சுயமரியாதைத் திருமணம் மற்றும் முழுமையான பெண் விடுதலை போன்ற சமுதாய முன்னேற்றச் செயல்திட்டங்கள் இவ்வியக்கத்தின் அடிப்படை நோக்கங்களாகும்.

## சுயமரியாதை இயக்கத்தின் நல்விளைவுகள்

சமுதாயத்தில் இளைஞர்கள் பலர் விழிப்புணர்வு பெற்றார்கள். பெண் பிள்ளைகள் பெருமளவில் கல்வி கற்க முற்பட்டனர். திருமணங்களில் உள்ள தேவையற்ற சடங்குகள் நீங்கின. ஏழை எளியோர் பொருட்செலவின்றித் தங்கள் குழந்தைகளுக்குத் திருமணம் செய்தனர். சாதியுடன் கூடிய பட்டப்பெயர்கள் குறையத் தொடங்கின.

## சூழலியல் அறம்

இந்தப் பூமி முழுவதிலும் மக்கள் வாழும் இடங்களையும், அவ்விடங்களில் உள்ள உயிரினங்கள் மற்றும் உயிரற்றவற்றையும் குறிக்கும் ஒருங்கிணைந்த ஒரு சொல்லாகச் 'சூழலியல்' (Ecology) பயன்படுத்தப்படுகிறது. இது நீர், உணவு, காற்று, நிலம், கடல், மலை, காடு, சூரிய ஒளி எனப் பலவற்றையும் குறிப்பிடுவதாகும். இச்சூழலியல் என்பது, மனிதன் தோன்றுவதற்கு முன்பே இங்குள்ளதாகும்.

உலகத் தோற்றத்திற்குக் காரணமாகப் பெருவெடிப்புக் கொள்கை (The Big Bang Theory), மாறாநிலைக் கொள்கை (The Steady State Theory), துடிப்புக்கொள்கை (The Pulsating Theory or The Oscillating Universe Theory) என்ற மூன்றைப் பகுத்தறிவாளர் முன்வைக்கின்றனர். இம்மூன்றினுள் இன்று பெரும்பாலோரால் ஏற்றுக்கொள்ளப்படுவது, 'பெருவெடிப்புக் கொள்கை' ஆகும்.

பெருவெடிப்புக் கொள்கைப்படி, ஏறக்குறைய 20 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர், பருப்பொருள்கள் அனைத்தும் துண்டுகளாகத் திசைகள்தோறும் வெடித்து விண்மீன் வடிவத் திரளாகச் சிதறின என்றும், இவ்விண்மீன் திரள்களிடையிலான இடைவெளி தொடர்ந்து அதிகரித்துக் காலப்போக்கில் இவை முழுவதுமாக மறைந்தொழிந்துவிடும் என்றும், இறுதியில் இப்பேரண்டத்தில் பொருளோ ஆற்றலோ உயிரினமோ நில்லா என்றும் பெருவெடிப்பாளர் கருதுகின்றனர். இதை ஏற்கத் தயங்குவோரும், இங்குத் தொடர்ந்து நிகழும் சூழல் மாசுபாட்டால் உலகம் அழியலாம் என்ற அறிவியலாளர் கருத்துடன் முழுநிலையில் உடன்படுகின்றனர்.

இத்தகைய மாசுபாடுகள் அனைத்தையும் தவிர்த்தால் மட்டுமே, இந்தப் பூமியும் இங்கு வாழும்

மனிதர்கள் உள்ளிட்ட அனைத்துவகை உயிரினங்களும் நோயின்றி நீண்ட ஆயுளுடன் வாழ முடியும். இதை அனைவருக்கும் நினைவூட்டுவதற்காகவே, ஒவ்வோர் ஆண்டும், உலகம் முழுவதிலும் ஜூன் மாதம் 5ஆம் நாள், 'உலகச் சுற்றுச்சூழல் நாள் (World Environment Day)' எனக் கொண்டாடப்படுகிறது. இந்த நாளை நாம் கொண்டாடினால் மட்டும் போதாது; 'சுற்றுச் சூழலைப் பேணுவோம்' என்ற உறுதிமொழியை ஒவ்வொருவரும் தம் வாழ்நாள் பணியாகக் கருதி ஏற்றுக்கொள்ளவேண்டும். அப்போதுதான் இவ்வுலகம் தூய்மையும் அழகும் பெற்றுச் சிற்றுயிர்களும் பேருயிர்களும் ஒருங்கிணைந்து வாழ்வதற்கான தகுதியைப் பெறும். இந்தத் தகுதியைக் கற்றுத்தருவதே சூழலியல் அறமாகும்

**உங்களுக்குத் தெரியுமா?**

**சூழலியல் மாசுபாட்டின் வகைகள்**

காற்றுவெளி மாசுபாடு (Air Pollution)
இரத்த மாசுபாடு (Blood Pollution)
நீர் மாசுபாடு (Water Pollution)
கடல் மாசுபாடு (Marine Pollution)
மண் மாசுபாடு (Soil Pollution)
உணவு மாசுபாடு(Food Pollution)
கதிரியக்க மாசுபாடு (Radioactive Pollution)
வெப்ப மாசு (Heat Pollution)
ஹார்மோன் மாசுபாடு (Harmone Pollution)
ஒளி மாசுபாடு (Light Pollution)
இரைச்சல் மாசுபாடு (Noise Pollution)
நெகிழி மாசுபாடு (Plastic Pollution)
மனையக மாசுபாடு (Indoor Pollution)
திடக்கழிவு மாசுபாடு (Solid Waste Pollution)
பூச்சிக்கொல்லி மாசுபாடு (Pesticide Pollution)

நமது சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்குப் பின்வரும் சூழல் அறச்செயல்பாடுகள், அறிஞர்களால் பரிந்துரைக்கப்படுகின்றன.

- 'ஒரு மனிதனுக்கு ஒரு மரம்' என்ற கொள்கையைப் பின்பற்றவேண்டும்.
- பயிர்நிலத்திற்காகத் தாவரங்களை அழிக்கக்கூடாது.
- வீடு கட்டுவதற்காகக் காட்டு மரங்களை வெட்டக்கூடாது.
- மண்ணரிப்பையும் மண்ணள்ளலையும் தவிர்க்கவேண்டும்.
- வேட்டையாடுவதை விட்டொழிக்கவேண்டும்.
- எந்திர மற்றும் வாகன இரைச்சலைக் குறைக்கவேண்டும்.
- உடனுக்குடன் கழிவுகளை அகற்றுவதும் இன்றியமையாததாகும்.
- எரிபொருள்களின் பயன்பாட்டையும் புகை வெளியேறுவதையும் கட்டுப்படுத்தவேண்டும்.
- இடுகாடுகளும் சுடுகாடுகளும் ஊருக்கு வெளியே அமைக்கப்பட வேண்டும்.
- இயற்கையைச் சுரண்டும் பேராசையைக் கைவிடவேண்டும்.

சூழலியல் அறம் என்பது மானுட அறமாகும். சுற்றுச்சூழலைப் பேணுவதன் வாயிலாகத் தம்மையே மனிதர்கள் பேணிக்கொள்கின்றனர். இது தொடர்பாகப் 'புலிட்சர் விருதை' (Pulitzer Award), 1979 மற்றும் 1991ஆம் ஆண்டுகளில், தம் உயிரியல் ஆய்வுகளுக்காகப் பெற்ற உலகப்புகழ் வாய்ந்த அறிஞர் எட்வர்ட் ஆஸ்பார்ன் வில்சன் வலியுறுத்தும் சூழல் அறக்கருத்தும் எண்ணத்தக்கதாகும்.

"மானுடத்திற்குப் பல்லுயிர்ப் பன்மையின் பங்களிப்பை அறிந்து அதைப் பயன் கொள்ளும்போது, அதன் ஒவ்வொரு துகளும் எவ்வளவு விலை மதிப்பற்றது என்பது நமக்கு விளங்கும்" என்கிறார் எட்வர்ட் ஆஸ்பார்ன் வில்சன்.

## விலங்குநல அறம்


மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் இடையிலான உறவை விளக்குவதும் புரிந்துகொள்ள முனைவதும் விலங்குநல அறமாகும். இது விலங்குகளின் வாழ்வுரிமை, அவற்றின் மேம்பாடு, காட்டுயிர்ப் பேணல், விலங்குக்கல்வி, விலங்குநலச் சட்டம், உயிரிரக்கம் மற்றும் உயிர்நேயக் கொள்கைகளையும் உள்ளடக்கியதாகும்.

விலங்குகளின் மாண்பைக் குலைப்பதாகவும், தார்மீக மீறலாகவும் விலங்குவதையைக்



Unit 10.indd 178 13-02-2020 20:56:40

கொள்ளலாம். ஓணான் அடித்தல், வண்ணத்துப்பூச்சிகளின் சிறகைப் பிய்த்தல், பொன்வண்டைப் பிடித்தல், நாயின்மீது கல்லெறிதல், மாட்டை அடித்தல், கழுதை வாலில் பட்டாசு கட்டுதல், கிளியைப் பிடித்துக் கூண்டில் அடைத்தல் எனச் சிறாரப் பருவத்தில் நம்மையும் அறியாமல் நாம் பல்வேறு உயிரிகளுக்குத் தீங்கு செய்திருக்கிறோம். இவை இன்று சட்டப்படி தண்டனைக்குரிய குற்றங்களாகும்.




நமது அன்றாட வாழ்வில் உரிய விழிப்பின்றிச் செய்யும் பல்வேறு செயல்களால், விலங்குநலத்துக்குத் தொடர்ந்து நாம் கேடு செய்கிறோம் என்பதை உணரவேண்டும். இதனை உணரத் தலைப்பட்ட நிலையில், 1866ஆம் ஆண்டு விலங்குவதைத் தடைச்சட்டத்தை அமெரிக்கர்கள் கொண்டுவந்தனர். விலங்குகளை ஆய்வுப் பொருள்களாகப் பயன்படுத்துவதால் அவற்றுக்கு ஏற்படும் துன்பங்களைவிட, மனிதர்களுக்கு விளையும் நன்மைகளே அதிகமென்று அறிவியலாளர் வாதாடினர். இது பயன்பாட்டுக் கருத்தியலாகும். இதனை ஏற்க மறுத்த உயிரிரக்கக் கோட்பாட்டாளர்கள், உயிரினங்கள் அனைத்துக்கும் உயிர்வாழும் உரிமையுண்டு என்றும், மனிதர்களின் நலன்களுக்காக விலங்குகளை வதைக்கவோ அழிக்கவோ கூடாதென்றும் கருத்துரைத்தனர். இது பயன்பாட்டுக் கருத்தியலுக்கு எதிரானதாகும்.

1992இல் விலங்குகள் என்பவை பொருள்கள் அல்ல; அவை உயிர்கள் என்ற சட்டத் திருத்தத்தைச் சுவிட்சர்லாந்து நாட்டினர் நிறைவேற்றினர்.

2013இல் இந்தியச் சட்டம், மனிதர்களுடன் ஒப்பவைத்து எண்ணத்தக்க உயிரிகளாக டால்பின்களை ஏற்றுக்கொண்டதுடன், மனிதர்களுக்குள்ள அனைத்துரிமைகளையும் அவற்றுக்கும் உறுதிசெய்தது.

அசையும் சொத்துக்களாகக் கருதப்பட்ட விலங்குகளுக்கு உணர்வுயிரிகள் என்ற அடைமொழியை, 2014இல் சட்டத்திருத்தம் மூலமாகப் பிரான்ஸ் நாட்டினர் வழங்கியுள்ளனர்.

நெதர்லாந்து, நியூசிலாந்து, ஸ்வீடன், இங்கிலாந்து, ஜெர்மனி, ஆஸ்திரியா ஆகிய நாடுகளில் ஒரங்குட்டன், கொரில்லா, சிம்பென்சி ஆகிய மூன்றும் மனிதனுக்கு ஒப்பானவை எனக் கருதப்பட்டு ஆய்வகச் சோதனைகளில் அவற்றைப் பயன்படுத்தக் கடுமையான தடைகள் விதிக்கப்பட்டுள்ளன.

உங்களுக்குத் தெரியுமா?

**வன விலங்குகள் ஏன் அழிகின்றன என்று உங்களுக்குத் தெரியுமா ?**

- பாதுகாப்பற்ற சூழ்நிலை
- காடுகளின் பரப்பளவு குறைதல்
- வனத்தாவரங்கள் அழிக்கப்படுதல்
- வறட்சி மற்றும் காட்டுத் தீ
- வேட்டையாடுதல்
- தொற்றுநோய்கள்
- மின்வேலிகள்



Unit 10.indd 179 13-02-2020 20:56:40

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 21ஆம் பிரிவின்கீழ், 2000ஆம் ஆண்டில் கேரள உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின்படி, வேடிக்கை வட்டரங்கில் (Circus) உள்ள விலங்குகளுக்கும் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.

நமது நண்பர்களான விலங்குகளிடம் இரக்கம் காட்டுவதுடன், அவற்றின் உரிமைகளை இனங்காண்பதும் பாதுகாப்பதும் நமது அடிப்படைக் கடமைகளாகும். 1960ஆம் ஆண்டு விலங்குவதைத் தடைச்சட்டத்தில் 2012இல் மேற்கொள்ளப்பட்ட திருத்ததில், 15 ஆம் பிரிவு உயிருள்ள விலங்குகளைக் கல்வி ஆய்வுகளுக்காகக்கூடப் பயன்படுத்தக்கூடாது என இந்திய அரசு தடை செய்துள்ளது.

### இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் வழங்கியுள்ள விலங்கு உரிமைகள்

- அனைத்து உயிர்களிடமும் பரிவு காட்டுவது, ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் அடிப்படைக் கடமையாகும்.
- தெருவில் திரியும் விலங்குகளைக் காயப் படுத்துவதும் கொல்வதும் சட்டப்படி குற்றமாகும்.
- எக்காரணம் கருதியும் எவ்விலங்கையும் கைவிடும் செயல் மூன்றுமாதச் சிறைத் தண்டனைக்குரியது.
- கட்டிவைத்தோ, உணவிடாமல் வதைத்தோ, குடிநீரை மறுத்தோ, தங்குமிடம் தராமலோ விலங்குகளைப் பல மணிநேரம் துன்புறுத்துவது தண்டத்தொகைக்கும் சிறைத்தண்டனைக்கும் உரியதாகும்.
- குரங்குகளை வளர்ப்பதும், காட்சிப்பொருள் ஆக்குவதும் தடை செய்யப்பட்டுள்ளன. வேடிக்கை வட்டரங்குகளில் அல்லது தெருக்களில் வித்தை காட்டும் பொருட்டுக் குரங்கு, சிறுத்தை, கரடி, புலி, சிங்கம், காளை ஆகிய விலங்குகளைப் பயிற்சிகள்வழித் துன்புறுத்தக்கூடாது.
- உயிரியல் பூங்காக்களில் குப்பைகளை வீசுதலும், விலங்குகளைச் சீண்டுதலும், விலங்குகளுக்கு உணவிடுதலும், தொந்தரவு செய்தலும் குற்றமாகும். இக்குற்றத்திற்கு ரூபாய் 25,000 தண்டத்தொகையும், மூன்றாண்டுச் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.
- விலங்குகளைப் பிடித்தல், வலையில் அகப்படுத்தல், நஞ்சூட்டல், தாக்குதல் அல்லது துன்புறுத்த முனைதல் முதலிய குற்றங்கள் ரூபாய் 25,000 தண்டத்தொகைக்கும் ஏழாண்டுச் சிறைத் தண்டனைக்கும் உரியன.
- முட்டைகளை உடைத்தல் அல்லது இடம் பெயர்த்தல், ஊர்வன மற்றும் பறவைகளின் வாழ்விடங்களைச் சிதைத்தல், அவை வாழும் மரங்களை வெட்டுதல் அல்லது அதற்காக முனைதல் ஆகியன வேட்டையாடுவதற்கு இணையான குற்றங்களாகக் கருதப்பட்டு, ரூபாய் 25,000 தண்டத்தொகையும் ஏழாண்டுச் சிறைத்தண்டனையும் விதிக்கப்படும்.
- விலங்குகளை ஆய்வுக்குட்படுத்தித் தயாரிக்கப்பட்ட ஒப்பனைப் பொருள்களுக்கும், அவற்றை இறக்குமதி செய்வதற்கும் தடை செய்யப்பட்டுள்ளது.

விலங்கு நல அறம் என்பது, ஒரு நவீனக் கருத்தியல் மட்டுமன்று. இது பழந்தமிழ் இலக்கியங்களிலும் சிறப்பாக வலியுறுத்தப்பட்டுள்ளதைக் காண்கிறோம். தாய், தந்தை முதலிய உறவுநிலைகளை ஆநிரைக்கும் பொருத்திப் பசுங்கன்றின் துயரத்துக்காகப் பரிந்து, 'இன்னே வருகுவர்' என்று ஆறுதல் கூறுகிறாள், முல்லைப்பாட்டில் வரும் ஆய்மகள்.

*"சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்*
*உறுதுயர் அலமரல் நோக்கி ஆய்மகள்*
*நடுங்குசுவல் அசைத்த கையள் கைய*
*கொடுங்கோல் கோவலர் பின்னின்று உய்த்தர*
*இன்னே வருகுவர் தாயர் என்போள்"*

(முல்லைப்பாட்டு : 16–12)

'இதோ வந்துவிட்டனர் உங்கள் அன்னையர்' எனக் கன்றுக்குப் பரிந்து பேசும்



Unit 10.indd 180 13-02-2020 20:56:40

இம்முல்லைப் பாட்டின் ஆய்மகள், விலங்குகள் மீது மானுடர் செலுத்த வேண்டிய உயிர்நேயப் பண்புக்குச் சிறந்த சான்றாகிறாள். சிற்றுயிர்களுக்கும் துன்பம் நேராதவாறு வாழ்வதே பழந்தமிழர் பண்பாடு ஆகும். இதன் பிழிவைப் பின்வரும் நற்றிணைப் பாடலிலும் காணலாம்.

*'புணரி பொருத பூமணல் அடைகரை*
*ஆழி மருங்கின் அலவன் ஓம்பி*
*வலவன் வள்பு ஆய்ந்து ஊர'* (நற்றிணை: 8–6 :11)

கடற்கரை மணலில் தேரோட்டிச் செல்பவன், அங்குள்ள நண்டுகளுக்குத் துன்பம் நேராதவாறு குதிரைகளைத் திருப்புகிறான் என்கிறார் உலோச்சனார். இத்தகைய உயிர்நேயம் உலகோர் அனைவரும் வியக்கத்தக்கதாகும். இக்கருத்தின் இன்னொரு கோணத்தைக் கவிஞர் இன்குலாப், 'பவுர்ணமி இரவில்' என்ற தம் கவிதையில், பின்வருமாறு வெளிப்படுத்தியுள்ளார்.

*'பவுர்ணமி இரவின் படகுக்காரரே!*
*நதிநீரை அலைக்கும் நாணல் புதர்களை*
*விலக்கிச் செல்கையில்*
*மெதுவாகச் செல்லுங்கள்!*
*வழியில் தண்ணீர் வாத்துகள் அடைகாத்த*
*முட்டைகள் கிடக்கலாம்*
*கால்கள் - மோதிவிடாதிருக்கட்டும்!'*

இத்தகைய உயிர்நேயம், என்றுமுள தென்தமிழின் மானுடக்கொடையாகும்.

## இராணுவ அறம்

'இராணுவ அறம்' என்பது அனைத்துவகை இராணுவச்செயல்பாடுகளையும் குறிப்பதாகக் கொள்ளலாம். இராணுவ அறத்திற்குக் 'கீழ்ப்படிதல்' என்பது மிகவும் இன்றியமையாததாகும். இது குறிப்பாகக் போர்க்காலங்களில் கடைப்பிடிக்கபட வேண்டியதாகும். நவீன அறிவியல் கருவிகளைப் பயன்படுத்தும் திறனும் விழிப்பும் ஒழுங்கும் இங்குத் தேவைப்படுகின்றன. இத்தேவையைப் பொறுப்புணர்வுடன் நிறைவேற்றுவதை, 'இராணுவ அறம்' வலியுறுத்துகிறது.

**உங்களுக்குத் தெரியுமா?**

**இராணுவத்திற்கான ஏழு அறங்கள்...**

- பற்றுறுதி (Loyalty)
- கடமை (Duty)
- மதிப்பு (Respect)
- தன்னலமற்ற தொண்டு (Selfless Service)
- மாண்பு (Honour)
- நம்பிக்கை (Integrity)
- மனத் துணிவு (Personal Courage)

**இராணுவ அறத்தின் பாற்பட்ட விலக்க முடியாத விதிகளைப் பின்வருமாறு தொகுக்கலாம்.**

- ஒரு குறிப்பிட்ட சூழலில் படைகளைக் களமிறக்க வேண்டிய நெருக்கடியுள்ளதா என்பதைத் தெளிவாக அறிந்த பிறகே அத்தகைய நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும்.
- போரிடும்போது கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகளைக் கண்டிப்பாகப் பின்பற்றவேண்டும்.
- எளிய குடிமக்களின் உயிர்களுக்கு ஊறு ஏற்படாத வகையில், தாக்குதல் நடவடிக்கைகளைக் கட்டுக்கோப்புடன் கையாளவேண்டும்.
- ஒரு நாட்டின் மாண்புக்கும் கண்ணியத்திற்கும் இழுக்கு ஏற்படாத முறையில், இராணுவ நடவடிக்கையைத் தவிர்க்கமுடியாமைக்கான நியாயங்களைப்பகுத்தறிவுக்கோட்பாட்டிற்குப் பொருந்துமாறு ஆட்சித்தலைவர்கள் பொதுவெளியில் விளக்கவேண்டும்.
- நவீனப் போர்த்தொழில்நுட்பக் கருவிகளைப் பயன்படுத்துகையில், அவை நடைமுறை இராணுவ அறவிதிகளுக்கு முரண்படாமலிருப்பதை உறுதி செய்துகொள்ள வேண்டும்.
- அமைதியை நிலைநாட்டுவதற்காக



Unit 10.indd 181 13-02-2020 20:56:40

மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகள், இரு தரப்பிலுமுள்ள வெகுமக்களின் அடிப்படை உரிமைகளுக்குக் கேடு செய்யாதவாறு ஒழுங்குபடுத்தப்படுதல் சாலச்சிறந்ததாகும்.

- சட்டத்தின் அடிப்படையிலும் நியாயத்தின் அடிப்படையிலும் இராணுவ முடிவுகள் எடுக்கப்படவேண்டும்.
- குழந்தைகள், பெண்கள், நோயாளிகள், முதியோர், எளியோர் முதலியோரைப் பாதுகாக்கவேண்டும்.
- வழிபாட்டிடங்கள், வரலாற்றுச்சின்னங்கள், நினைவில்லங்கள், நூலகங்கள், பூங்காக்கள், மருத்துவமனைகள், கலைக்கூடங்கள் முதலியவற்றைத் தாக்கக்கூடாது.
- சரியான முடிவுகளைத் தவறான காரணங்களுக்காகவோ, தவறான முடிவுகளைச்சரியானகாரணங்களுக்காகவோ மேற்கொள்வதைத் தவிர்க்கவேண்டும்.
- போர்க்கைதிகளைக் குற்றவாளிகளைப்போல் நடத்தக்கூடாது; அரசியல் கைதிகளைத் தண்டிப்பதற்குரிய சட்டங்களுக்குட்பட்டு அவர்களை அணுகவேண்டும்.

## பெண்ணிய அறம்

ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழும் சமத்துவச் சூழலை நோக்கித் தற்கால உலகம் சென்றுகொண்டிருக்கிறது, இச்சூழலில், சமூகத்தின் சரிபாதியான பெண்ணினத்தின் சிக்கல்களைப் பேசவும், அவற்றுக்குத் தீர்வு காணவும் உதவும் ஒரு கோட்பாடாகப் பெண்ணியத்தை வரையறுக்கலாம். இப்பெண்ணியம்வழிப் பெண்நலம் பேணுவது பெண்ணிய அறமாகும்.

பெண்ணிருப்புக்கான நியாயங்களைப் பெண்ணின் கண்ணோட்டத்தின் வழியாகக் காண்பதும் பெண்களின் சமத்துவத்தையும் வளர்ச்சியையும் வலியுறுத்துவதும் பெண்களின் சார்பாகப் போராடுவதும் எல்லா நிலைகளிலும் பெண்களின் பங்கேற்பை உறுதிசெய்வதும் பெண்ணிய அறக்கோட்பாட்டின் இலக்குகளாகும்.

**உங்களுக்குத் தெரியுமா?**

சமத்துவம் என்பது போராடிப் பெறும் ஏதோ ஒரு கருத்தியல் இல்லை; அது ஒரு தேவை; புவியீர்ப்பு விசை போன்று இயற்கையானது; ஆண்களும் பெண்களுமாகப் பூமியில் காலூன்றி நிற்பதற்கு அது வேண்டும்; அனைத்துப் பண்பாடுகளிலும் உள்ள பெண் வெறுப்பு என்பது மானுடத்தின் உண்மை இயல்பன்று; அது ஒரு சமநிலைக் குலைவே. (ஜோஸ் வேடன்) பெண்ணியம், முனைவர் இரா. பிரேமா, தமிழ்ப் புத்தகாலயம்

சமூக எழுச்சியின் ஒரு பகுதியாகவும் ஓர் அறிவார்ந்த கொள்கையாகவும் போராட்டக் கருவியாகவும் நியாயமான எதிர்ப்புணர்வாகவும் பெண் விடுதலை பற்றிய கருத்தியல் உருவானதாகக் கூறலாம்.

வழிவழியாக வந்த நியாயங்கள், தொடர்ந்து உருவாக்கப்பட்ட மதிப்புகள், விதிக்கப்பட்ட நெறிகள், கற்பிக்கப்பட்ட புனிதங்கள் போன்ற அனைத்தையும் பெண்ணிய அறம் கேள்வி கேட்கிறது.

உரிய இடம், உரிய பங்கு, உரிய மதிப்பு, உரிய ஊதியம், உரிய உரிமை, உரிய அதிகாரம் முதலியவற்றைப் பெண்ணிய அறம் உறுதிசெய்கிறது.

உடலால், உள்ளத்தால், மொழியால், கருத்தால், செயலால், விளைவால் ஆணுக்கிணையாகத் தன்னையும் பெண் வெளிப்படுத்திக்கொள்வதைப் பெண்ணிய அறம் வரவேற்கிறது.

பெண்களின் இயல்பான விருப்பங்கள், உள்ளத்துணர்வுகள், அவற்றின் முறிவுகள், சிதைவுகள், அழுத்தங்கள் முதலியவற்றைப் படைப்பிலக்கியங்கள் மற்றும் பிற கலை வெளிப்பாடுகளின்வழிப் பதிவுசெய்வதைப் பெண்ணிய அறம் ஊக்குவிக்கிறது.

பொதுமொழி என்பது பெரிதும் ஆண் மொழியாகவே உள்ளது. ஆண் மொழியின் சொற்கள், பெண்ணைக் கேலி செய்வதாகவும், அவளின் இருப்புக்குரிய மதிப்பை மறுப்பதாகவும் உள்ளன. இந்நிலையில், ஒரு புதிய பெண் மொழியின் தேவையைப் பெண்ணிய அறம் வலியுறுத்துகிறது. (எ.கா.) Chairman – Chairperson, Chairwoman, Chair; ஆசிரியன் – ஆசிரியை, ஆசிரியர்; மாணவன் - மாணவி, மாணவர்.

பெண்களுக்குக் கல்வி உரிமை, மணத்தெரிவு உரிமை, சொத்து உரிமை, தொழில் உரிமை, வழிபாட்டு உரிமை, மணவிலக்கு உரிமை, குழந்தைப் பேற்றைத் தீர்மானிக்கும் உரிமை, பேறுகால விடுப்பிற்கான உரிமை, அரசியல் பங்கேற்பு உரிமை, ஓட்டுநர் உரிமை, வேலை பார்க்கும் பெண்கள் சங்கம் (Professional Women's Club) அமைப்பதற்கான உரிமை எனப் பல்வேறு உரிமைகளைப் பெண்ணிய அமைப்புகள் போராடிப் பெற்றுள்ளன.

மரபுவாதப் பெண்ணியம் (Conservative Feminism), தாராளவாதப் பெண்ணியம் (Liberal Feminism), தீவிரவாதப் பெண்ணியம் (Radical Feminism), சமதர்மப் பெண்ணியம் (Social Feminism), பண்பாட்டுப் பெண்ணியம் (Cultural Feminism), ஆன்மீகப் பெண்ணியம் (Spiritual Feminism), சீர்திருத்தப் பெண்ணியம் (Reformist Feminism), தலைமை வேண்டாப் பெண்ணியம் (Anarcha Feminism), அமைப்பை மறுக்கும் பெண்ணியம் (Rebellion Feminism), புரட்சிகரப் பெண்ணியம் (Revolutionary Feminism), வன்முறை எதிர்ப்புப் பெண்ணியம் (Anti-Violence Feminism), கருப்பினப் பெண்ணியம் (Black Feminism), சூழல் பெண்ணியம் (Eco-Feminism) எனப் பலவாறாகப் பெண்ணிய இயக்கங்களைப் பெண்ணியவாதிகள் பகுத்துள்ளனர். இந்தப் பெண்ணிய இயக்கங்கள், உலகம் முழுவதிலும் பரவிப் பெண் உரிமைகளுக்காகப் போராடி வருகின்றன. இவற்றை முதல் கட்டப் பெண்ணியம், இரண்டாம் கட்டப் பெண்ணியம், மூன்றாம் கட்டப் பெண்ணியம் என மூன்றாகப் பகுக்கலாம்.

### முதல் கட்டப் பெண்ணியம் (First Wave Feminism)

பெண் கல்வி, பாலினச் சமத்துவம், போதைப்பொருள் மறுப்பு, பெண்ணடிமை ஒழிப்பு முதலியவற்றைக் குறிக்கோளாக்கிப் பெண்ணியத்தின் முதல் அலை (1900– 1930), உலகம் முழுவதும் எழுந்தது. இது பெண் பற்றிய மரபுவழிக் கருத்துகளைப் பொதுநிலையில் எதிர்த்தது. அடிப்படையான மனித உரிமைகளையே இது கோரியது.

### இரண்டாம் கட்டப் பெண்ணியம் (Second Wave Feminism)

ஆண்களுக்கு இணையாகப் பெண்களுக்கும் வாக்குரிமை, வேலை வாய்ப்பு, பணியிடப் பாதுகாப்பு, சம ஊதியம் முதலியவற்றைப் பெரிதும் வலியுறுத்துவதாகப் பெண்ணியத்தின் இரண்டாம் கட்டம் (1900 1960–) அடைந்தது. இது ஒடுக்கப்பட்டவர்களான நலிந்தோரின் உரிமைகள் அனைத்தையும் தன்னோடு இணைத்துக்கொண்டு வலிமையுற்றது. இவ்வகையில் பெண்களின் அரசியல் பங்கேற்பையும் இது முன்னெடுத்தது.

### மூன்றாம் கட்டப் பெண்ணியம் (Third Wave Feminism)

மானுட உரிமைப்போருக்கான உரையாடலின் ஒருபகுதியாக, மூன்றாம் கட்டப் பெண்ணியம் (1960 – இன்றுவரை) அமைகிறது. இது ஆண் வெறுப்பில் விளையவில்லை; இரண்டாம் பாலினமாகப் பெண்ணைக் கருதிப் பெண்ணுக்கான உரிமைகளைப் பெறக் கெஞ்சவில்லை; தடைகளைத் தானே உடைத்துத் தனக்கான விடுதலையைத் தானே படைத்துக்கொண்டது.

பெண்ணிய அறம் என்பது ஆண்களுக்கு இணையாகக் கல்வியும் வேலையும் சொத்தும் கேட்டுப்போராடுவதுடன் அமைதிகொள்வதில்லை. அது உலகம் முழுவதும் வாழும் அனைத்து மனிதர்களின் வாழ்வுரிமைகளுக்காகவும் ஒலிக்கும் ஒரு வலிமையான அறக்குரலாகும். இதனால்தான் கார்ல் மார்க்ஸ், "ஒரு சமூகத்தின்

முன்னேற்றத்தை வெள்ளையினப் பெண்களின் முன்னேற்றத்தை வைத்து மட்டுமல்லாமல், கருப்பினப் பெண்களின் முன்னேற்றத்தையும் சேர்த்து வைத்தே அளவிடவேண்டும்" எனச் சமூக விடுதலையின் முழுமுதற்காரணியாகப் பெண் முன்னேற்றத்தைப் பரிந்துரைக்கிறார்.

## சமயஞ்சாரா அறம்

சாதி, மதம், இனம், மொழி, வட்டாரம், பால் பாகுபாடுகளைத் தாண்டிய நிலையில் அறம் என்பது உலகப் பொதுவானதாகும். இத்தகைய பொதுமை அறம் மனிதகுலம் முழுமைக்கும் பயனளிப்பதாகும். இயற்கையைத் தொடக்கத்தில் வழிபட்ட மனிதன், 'அரசு, குடும்பம், சமயம்' ஆகிய நிறுவன அமைப்புகள் உருப்பெற்றநிலையில் இயற்கையை மீறிய கருத்துருவங்களைச் சிலைகளாகவும் கோவில்களாகவும் பிற வழிபாட்டுச் சின்னங்களாகவும் தொழத் தொடங்கினான். இதன் விளைவாகச் சமயம் என்பது எளிய மனிதர்களின் அன்றாட வாழ்வில் குறுக்கிடும் திட்டவட்டமான இறுகிய விதிகளைக் கொண்ட நிறுவன அமைப்பானது.

இந்த உலகையும் இங்கு வாழும் வாழ்வையும் பெரிதாகக் கருதாமல் சொர்க்க நரகங்களைச் சமய நிறுவனங்கள் வலியுறுத்தின. அன்பு, அருள், இரக்கம், பரிவு, தோழமை முதலியவற்றை வளர்க்க விரும்பிய சான்றோர் பெருமக்கள், இவற்றுக்குச் சமய நிறுவனங்கள் வேண்டாம் என்று கருதிச் சமயஞ்சாரா அறத்தைச் சிறப்புக்குரியதாகப் பரிந்துரைத்தனர். இங்குச் சமயக் கருத்தியலில் அறம் இல்லை என்பது பொருளன்று; சமயஞ்சாரா மானுட விழுமியங்களில் செறிவும் ஆழமும் கூடிய மனிதப்பண்புகள் மிகுந்துள்ளன எனப் பொதுஅறத்தைப் பெரியோர் விரிவுபடுத்துவர்.

'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை' எனத் திருவள்ளுவர் கூறுவதைச் சமயஞ்சாரா அறக்கோட்பாடாகக் கருதலாம். இதன் நுண்விளக்கத்தைச் சீத்தலைச் சாத்தனார், "அறம் எனப்படுவது யாதெனக் கேட்பின், உண்டியும் உடையும் உறையுளும் அல்லது இல்" என்கிறார். "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்றும், "உடம்பை வளர்த்தேன் உயிரை வளர்த்தேன்" என்றும், உணவையும் உயிரையும் உலகையும் வாழ்வையும் பொருட்படுத்திச் சான்றோர் பேசியுள்ளனர். 'பசிப்பிணி என்னும் ஒரு பாவி' என்றும், 'கையது கொண்டு மெய்யது பொத்தி' என்றும், 'அழிபசி வருத்தம்' என்றும் அடிப்படைத் தேவைகள் நிறைவேறாததால் விளையும் துன்பங்களைப் புலப்படுத்தியுள்ளனர். இவற்றுக்குக் கடவுள் மற்றும் சமயச் சிந்தனைகளைத் தாண்டிய தீர்வுகளை உலக வாழ்விலேயே தேட வேண்டும் எனச் சான்றோர் கருதினர். சமூக அமைதிக்குச் சமயங்களால் பங்கம் வராமல் காத்து நல்லிணக்கத்துடன் மனிதர்கள் அனைவரும் ஒருங்குகூடிவாழும் இயல்பையே அவர்கள் வலியுறுத்தினர்.

சமயஞ்சாராமை என்பது கடவுள்/ சமயங்களின் மறுப்பு என்றும், பல்வேறு சமயங்களின் இடையே எந்தக் குறிப்பிட்ட சார்புநிலையையும் எடுக்காத நல்லிணக்கம் என்றும் இருவகையாகப் பொருள் கூறப்படுகிறது. மனித அறிவுப்புலங்களான தருக்கவியல், நடத்தையியல், நுண்ணறிவியல், சமூகவியல் போன்றவற்றின் அடிப்படையில் தோன்றுவதே சமயஞ்சாரா அறமாகும். இக்கோட்பாடுகள் இயற்கையிறந்த ஆணைகளாலோ சமயங்களாலோ ஏற்பட்டதல்ல. இவை மனிதநேயம், நல்லிணக்கம், சுதந்திரச் சிந்தனை உள்ள எந்த அமைப்புக்கும் பொருந்தும். தொன்மை நியதிகள், சமூக ஒப்பந்தங்கள், சட்ட நெறிகள், பணிப் பண்பாடு போன்ற பகுத்தறிவுக்குப் பொருத்தமான ஒழுகலாறுகள் சமயஞ்சாரா அறத்திற்குரியன.

'அன்பு, நேர்மை, உண்மை, ஒழுக்கம்' ஆகிய அறங்களும், வன்முறை எதிர்ப்பும் சமயஞ்சார்ந்த மற்றும் சமயஞ்சாராக் கருத்தியல்களுக்குப் பொதுவானவை. தனிமனித நலனையும் சமூகநலனையும் முன்வைக்கும் அறக்கொள்கைகளை ஏற்பதிலும் இவற்றிடையே ஒற்றுமையுள்ளது. ஆனால், கடவுளையும் கற்பிதங்களையும் சமயஞ்சாரா அறம் ஏற்பதில்லை. இயற்கை கடந்த, உண்மைக்குப் புறம்பான எதையும்



Unit 10.indd 184 13-02-2020 20:56:41

ஏற்றுக்கொள்ளாத சமயஞ்சாரா அறவியலாளரின் எடுகோள்களைப் பின்வருமாறு தொகுக்கலாம்.

**உங்களுக்குத் தெரியுமா?**

சமயங்களால் குற்றவாளிகள் உருவாவதைத் தடுக்கமுடியுமே தவிர, பண்பார்ந்த மனிதர்களை அவற்றால் உருவாக்கமுடியாது என்றும், பகுத்தறிவு விழுமியங்களே சிறந்தவை என்றும் கருதுவர். புகழ்பெற்ற உயிரியல் அறிஞரான ஸ்டீபன் ஜே கௌட் (Stephen Jay Gould), "இயற்கையிடமிருந்து விடைகளை மறுப்பேதும் சொல்லாமல் அப்படியே ஏற்கமுடியாது என்றும், பகுத்தறிவின் மூலமே அறத்தை வரையறுக்க வேண்டும்" என்றும் கூறுகிறார்.

- ❖ தமக்கு இயல்பான நற்பண்புகளின் அடிப்படையில், அறங்களைத் தமக்குத் தாமே படைக்கும் ஆற்றல் மனிதர்களுக்கு உண்டு.
- ❖ அறக்கோட்பாட்டாளர்கள் எடுக்கும் முடிவுகள் பொதுநலன்களைக் கருதியதாக அமையவேண்டும்.
- ❖ காரண காரிய அடிப்படையிலான நன்னெறிகளைக் காலத்திற்கு ஏற்ப மாற்றலாம்; புதுப்பிக்கலாம்.
- ❖ தீங்கு பயக்காத நன்னெறிகளையே தனிநபரும் சமூகமும் பின்பற்ற வேண்டும்.
- ❖ அறமும் பகுத்தறிவும் உள்ள பண்பட்ட சமூக அமைப்பை உருவாக்கவேண்டும்.

இத்தகைய சமயஞ்சாரா அறக்கருத்துக்களைத் திருக்குறளிலும் காண்கிறோம். கடவுள் பற்றிக் கூறும்போதும், எந்தச் சமயக் கடவுளையும் குறிப்பிடாமல், "தூய அறிவுடையவன், மெய்யான ஒழுக்கநெறி உடையவன், எண்வகை குணமுடையவன், வேண்டுதல் வேண்டாமை இல்லாதவன்" எனச் சமயப் பொறை பேசுகிறார் வள்ளுவர். அன்புடைமை, அருளுடைமை, அடக்கமுடைமை, அறிவுடைமை, பண்புடைமை, பொறையுடைமை, புறங்கூறாமை, வாய்மை, சான்றாண்மை, ஊக்கமுடைமை, இன்னா செய்யாமை எனச் சமயஞ்சாரா கருத்தியலின் அடிப்படைகளை வள்ளுவர் வரையறுத்துள்ளார். எனவே, எவ்வகை ஏற்றத்தாழ்வும் இன்றி, அனைவரும் உடன்பட்டு வாழும் மானுடநல அறமே 'சமயஞ்சாரா அறம்' எனலாம்.

## நிறைவுரை

அண்ணல் காந்தியடிகளின் அறநெறிகள், மனிதநேயம் சார்ந்த அறக் கருத்துகள், சூழலியல் அறம், விலங்குநல அறம், இந்திய அரசியலமைப்புச் சட்டம் வழங்கியுள்ள விலங்கு உரிமைகள், பெண்ணிய அறம், இராணுவ அறம், சமயஞ்சாரா அறம் ஆகியவை குறித்து விரிவாக விளக்கப்பட்டுள்ளன. மாணாக்கர் அறிந்துகொள்ளும் வகையில், பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள அண்மைக்கால அறநெறிப்போக்குகள், அவர்தம் வாழ்வில் கடைப்பிடித்து, நன்மாணாக்கராய் உயர வழிகாட்டும் என்பது திண்ணம்.



Unit 10.indd 185 13-02-2020 20:56:41

## மதிப்பீடு

Q1S5DZ

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. இந்தியாவை, சிறந்த ஓர் அகிம்சை நாடாக உலகிற்கு எடுத்துக்காட்டியவர் ––––– .

   அ) நேரு ஆ) காந்தி இ) வல்லபாய் பட்டேல் ஈ) தாகூர்

2. உண்மைக்காக அறவழியில் அமைதியாக எதிர்ப்பைத் தெரிவிப்பது ––– என்பதன் குறிக்கோளாகும்.

   அ) சர்வோதயம் ஆ) சத்யாகிரகம்

   இ) அகிம்சை ஈ) அறம்

3. மகாத்மா காந்தியடிகள் சத்தியாகிரகக் கொள்கையைக் கடைப்பிடித்து, முதலில் வெற்றி கண்ட நாடு.

   அ) இந்தியா ஆ) அமெரிக்கா இ) இங்கிலாந்து ஈ) தென்னாப்பிரிக்கா

4. மாணவனின் உயிர், உடல், உள்ளம் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பது எது?

   அ) செல்வம் ஆ) முயற்சி இ) கல்வி ஈ) மனஉறுதி

5. கீழ்க்காணும் கூற்றுகளில், காந்தியடிகளுக்குப் பொரத்தமில்லாத கூற்று எது?

   அ) எம்மதமும் சம்மதம் என்ற கொள்கை.

   ஆ) மனிதனிடமுள்ள விலங்குத்தன்மையை விலக்குவதே ஒழுக்கம்.

   இ) எல்லாச் சமயத்தவரின் புனிதநூல்களும் ஒரு சமயத்தவருக்கே உரியது அல்ல.

   ஈ) அனைத்துச் சமயங்களும் கடவுள் என்ற கடலைத்தேடிச் செல்லும் பல்வேறு நதிகள்.

6. இந்தியாவில் சமயநல்லிணக்கம் கடைப்பிடிக்கப்படும் நாள்

   அ) ஆகஸ்ட் – 20 ஆ) ஆகஸ்ட் –21 இ) ஆகஸ்ட் –22 ஈ) ஆகஸ்ட் –24

7. வள்ளலாரின் கூற்றுகளுள் சரியானவற்றைத் தெரிவு செய்க.

   1) பகைவனுக்கும் நன்மை செய்ய வேண்டும்.

   2) வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்.

   3) மனிதனுக்குப் பசிக்கு உணவளிக்க வேண்டும்.

   4) மனிதனின் புனிதமான நம்பிக்கையே சமயம்

   அ) 1, 2 சரியானவை ஆ) 2, 3 சரியானவை

   இ) 3, 4 சரியானவை ஈ) 1, 4 சரியானவை

8. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பாடல்வரி வலியுறுத்துவது

   அ) உலக சமாதானம் ஆ) சமூக ஒற்றுமை இ) மனிதநேயம் ஈ) தேசபற்று



Unit 10.indd 186 13-02-2020 20:56:41

9. பெரியாருக்கு 'வைக்கம்வீரர்' என்ற பட்டத்தை அளித்தவர்

அ) அண்ணா ஆ) காமராஜர் இ) இராஜாஜி ஈ) திரு. வி.க,

10. ஈ.வெ. ராமசாமியை முதன்முதலில் பெரியார் என அழைத்தவர்

அ) முத்துலெட்சுமி அம்மையார் ஆ) நீலாம்பிகை அம்மையார்

இ) சரோஜினி அம்மையார் ஈ) மணியம்மையார்

## குறுவினா

1. சமுதாயத்தின் ஏழு பாவங்கள் எனக் காந்தியடிகள் கூறுவன யாவை ?
2. சமய நல்லிணக்கம் என்றால் என்ன ?
3. சுயமரியதை இயக்கம் – குறிப்பு வரைக.
4. சூழலியல் – வரையறு?
5. சர்வோதயம் என்றால் என்ன ?
6. விலங்குநல அறம் என்றால் என்ன ?
7. மனிதனுக்கு ஒப்பானவையாகக் கருதப்பட்டு ஆய்வகச் சோதனைகளில் பயன்படுத்த தடைவிதிக்கப்பட்ட விலங்குகள் யாவை ?

## சிறுவினா

1. சத்தியா கிரகம் – வரையறு.
2. சர்வோதயக் கொள்கையின் சிறப்பம்சங்களைக் குறிப்பிடுக.
3. 'வைக்கம் வீரர்' – சிறு குறிப்பு எழுதுக.
4. சமய நல்லிணக்கம் ஏற்பட நீவிர் அறிந்தவற்றைக் கூறுக.
5. உலகச் சுற்றுச்சூழல் தினம் கொண்டாடுவதன் நோக்கம் யாது ?
6. மகாத்மா காந்தியின் மணிமொழிகளுள் மூன்றைக் குறிப்பிடுக.
7. பெண்ணிய இயக்கங்களுள் எவையேனும் மூன்றைக் குறிப்பிடுக.


## நெடுவினா

1. காந்தியடிகளின் சமுதாய அறக்கோட்பாடுகளைத் தொகுத்து எழுதுக.
2. பெரியாரின் சுயமரியதை இயக்கம் பற்றி விளக்குக.
3. மனிதநேயம் குறித்து வள்ளலார் கூறும் கருத்துகளைத் தொகுத்துக் கூறுக.
4. இந்திய அரசியலமைப்புச் சட்டம் வழங்கியுள்ள விலங்கு நல உரிமைகள் யாவை ?
5. சுற்றுச்சூழலைப் பாதுகாக்க அறிஞர்கள் பரிந்துரைத்த செயல்பாடுகள் யாவை ?
6. இராணுவ அறம் வலியுறுத்தும் விதிகளை விளக்குக.
7. சமயஞ்சாரா அறங்களை விளக்குக.

இணையச்செயல்பாடு

# காந்தியம்

கதர் ஆடை கதாநாயகனின் வாழ்வியல் அறிவோமா !



## படிகள்

- கொடுக்கப்பட்டிருக்கும் உரலி / விரைவுக்குறியீட்டைப் பயன்படுத்தி mkgandhi என்னும் இணையப்பக்கத்திற்குச் செல்க.
- திரையில் தோன்றும் ENTER என்பதைச் சொடுக்கியதும் அவரின் அரசியல், பிரபலமான பேச்சுகள், காந்தி மற்றும் கல்வி போன்ற அவரது வாழ்வியல்சார்ந்த பல தெரிவுகள் கொடுக்கப்பட்டிருக்கும். அவற்றைத் தேர்வு செய்து, அவரது வாழ்க்கை மற்றும் கொள்கைகளைப் பற்றி அறிக.
- எடுத்துக்காட்டாக, **காந்தி மீது வினாடி வினா** என்பதைச் சொடுக்கி, அவர் வாழ்வோடு தொடர்புடைய வினாக்களுக்கு விடையளித்து, விளையாட்டின்வழி அவர் வாழ்வியலை அறிக.

செயல்பாட்டின் படிநிலைக்கான படங்கள் :







காந்தியம் இணைய பக்கத்தின் உரலி

*https://translate.google.com/translate?hl=en&sl=en&tl=ta&u=https%3A%2F%2Fwww.mkgandhi.org%2F*

B148_11_EIC_TM

* படங்கள் அடையாளத்திற்கு மட்டுமே.



Unit 10.indd 188 13-02-2020 20:56:41

# மேல்நிலை முதலாமாண்டு
# மாதிரி வினாத்தாள் – I
# அறவியலும் இந்தியப்பண்பாடும்

**வகுப்பு : 11 ஆம் வகுப்பு**

**காலம்: 2.30 மணி** **மதிப்பெண்கள்: 90**

**அறிவுரைகள் :**

(1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளனவா என்பதைச் சரிபார்த்துக் கொள்க. அச்சுப்பதிவில் குறையிருப்பின், அதனைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்க வேண்டும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

## பிரிவு – I

குறிப்பு : (1) எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க. **20×1=20**

(2) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

1. "பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்" - இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் ----.

அ) நற்றிணை ஆ) குறுந்தொகை இ) கலித்தொகை ஈ) அகநானூறு

2. கீழ்க்காணும் கூற்றுகளில் தவறானதைச் சுட்டுக.

இசைப்பாடலாகிய பரிபாடல் குறிப்பிடுவது,

அ) பாண்டியர்களின் தலைநகரமான மதுரையின் சிறப்பு

ஆ) வையை ஆற்றின் சிறப்பு

இ) திருமால் முருகன் போன்ற தெய்வங்களை வழிபடும் முறை

ஈ) விநாயகரது சிறப்பு

3. பொருத்துக.

| குறுநில மன்னர்கள் | ஆட்சிசெய்த பகுதி |
|---|---|
| அ) வல்வில் ஓரி | 1. பொதியமலை |
| ஆ) அதியமான் | 2. மலையமாநாடு |
| இ) ஆய் அண்டிரன் | 3. தகடூர் |
| ஈ) திருமுடிக்காரி | 4. கொல்லிமலை |

அ) அ - 4, ஆ – 2, இ – 3, ஈ - 1

ஆ) அ - 4, ஆ – 3, இ – 1, ஈ - 2

இ) அ - 3, ஆ – 1, இ – 2, ஈ - 4

ஈ) அ - 1, ஆ – 2, இ – 3, ஈ - 4

4. சரியாகப் பொருந்தியுள்ள இணையைத் தேர்ந்தெடுக்க.

| திணை | | உரிப்பொருள் |
|---|---|---|
| அ) முல்லை | - | ஊடலும் ஊடல் நிமித்தமும் |
| ஆ) நெய்தல் | - | புணர்தலும் புணர்தல் நிமித்தமும் |
| இ) பாலை | - | பிரிதலும் பிரிதல் நிமித்தமும் |
| ஈ) மருதம் | - | இரங்கலும் இரங்கல் நிமித்தமும் |

5. சிந்துவெளி நாகரிகம் நகர நாகரிகமே என்று உறுதி செய்தவர்-----

அ) சர். மார்டிமர் வீலர் ஆ) ஆர். டி. பானர்ஜீ

இ) சர். ஜான் மார்ஷல் ஈ) ஹீராசு பாதிரியார்

6. கீழடித் தொல்லியல் களம் அமைந்துள்ள மாவட்டம்

அ) மதுரை ஆ) இராமநாதபுரம் இ) திருச்சி ஈ) சிவகங்கை

7. சரியான விடைக் குறிப்பைத் தேர்ந்தெடுக்க.

தமிழகத்தில் முதுமக்கள் தாழி கண்டுபிடிக்கப்பட்ட இடங்கள்

1. அத்திப்பாக்கம், அரிக்கமேடு

2. ஆதிச்சநல்லூர், திருகாம் புலியூர்

3. தாமிரபரணி ஆற்றங்கரை, அத்திரப்பாக்கம்

4. பூம்புகார், தரங்கம்பாடி

அ) 1, 2 சரியானவை ஆ) 1, 2, 3 சரியானவை

இ) 2, 4 சரியானவை ஈ) 1, 3, 4 சரியானவை

8. ஹரப்பாவில் கிடைத்த முத்திரைகளில், அமர்ந்த நிலையில் பொறிக்கப்பட்டுள்ள உருவம்---.

அ) பசுபதி ஆ) தாய்தெய்வம் இ) மகாயோகி ஈ) நடனமாது

9. கூற்று : "இரவி உள்ளளவும் மதியம் உள்ளளவும்

இவர்களே நரகில் எய்துவார் – வில்லிபாரதம்.

**விளக்கம்:** நல்லறிவுடைய அமைச்சராய் இருந்தும் அரசாட்சியை வேண்டுமென்றே கெடுப்பவர், சான்றோர் மொழியைப் புறக்கணிப்பவர், பிறர் செய்த உதவியை மறப்பவர், ஒருவர்



Maathiri Vina Vidai.indd 190 03-02-2020 17:40:58

வாழும் வீட்டில் உணவு உண்டு, அவருடன் சினந்து போர் புரிபவர் ஆகியோர் சூரிய, சந்திரன் உள்ளவரை துன்பம் அடைவர்.

அ) கூற்று சரி, காரணம் தவறு.

ஆ) கூற்று சரி, காரணமும் சரி.

இ) கூற்று தவறு, காரணமும் தவறு.

ஈ) கூற்று சரி, காரணம் சரி

10. தமிழ்மொழி தொன்றுதொட்டு -------- நெறிகளை உள்ளடக்கியது.

1. அறம், அன்பு 2. நீதி, அநீதி 3. அடக்கம், அமைதி 4. உண்மை, உழைப்பு

அ) 1, 3 சரியானவை ஆ) 3, 4 சரியானவை

இ) 1, 2, 3 சரியானவை ஈ) 1, 3, 4 சரியானவை

11. "நிலம்திறம் பெயரும் காலை ஆயினும்

கிளந்த சொல்நீ பொய்ப்பு அறியலையே" – எனக் கூறும் நூல்

அ) பதிற்றுப்பத்து ஆ) புறநானூறு இ) நற்றிணை ஈ) கலித்தொகை

12. சமண சமயக் கொள்கைகளைப் பற்றி நாலடியார் வலியுறுத்திக் கூறுவது

1. துறவறத்தைப் பாராட்டிப் பேசுதல் 2. புலால் உண்ணுதல்

3. உயிர்க் கொலை புரியாமை 4. உலக இன்பத்தை வெறுத்தல்

அ) 1, 3, 4 சரியானவை

ஆ) 2, 3, 4 சரியானவை

இ) 1, 2, 3 சரியானவை

ஈ) 1, 2, 4 சரியானவை

13. பொருந்தாததைச் சுட்டிக்காட்டுக.

இந்தியக் கட்டடக் கலை பரவியுள்ள நாடுகள்

அ) பர்மா, மலேசியா ஆ) இலங்கை, கம்போடியா

இ) மலேசியா, இந்தோனேசியா ஈ) பர்மா, இலங்கை

14. தமிழறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமி, வகைப்படுத்திய அழகுக்கலைகளின் எண்ணிக்கை--

அ) ஐந்து ஆ) நான்கு இ) ஆறு ஈ) மூன்று

15. தமிழகத்தில் ---------- பல்லவ மன்னர் காலத்தில் கற்றளி அமைக்கும் முறை ஏற்பட்டது.

அ) மகேந்திரவர்மன் ஆ) நரசிம்மவர்மன் இ) நந்திவர்மன் ஈ) நிருபதுங்கன்

16. நடுகல் பற்றிய குறிப்புகள் இடம்பெறாத நூல்

அ) தொல்காப்பியம் ஆ) புறநானூறு இ) அகநானூறு ஈ) பரிபாடல்

17. 'வேலன் வெறியாட்டு விழா' பற்றிக் குறிப்பிடாத நூலைத் தேர்ந்தெடுக்க.

அ) திருமுருகாற்றுப்படை ஆ) பட்டினப்பாலை

இ) முல்லைப்பாட்டு ஈ) குறிஞ்சிப்பாட்டு

18. தமிழகத்தில் சைவமும் வைணவமும் இணைந்து கொண்டாடும் மிகப்பெரிய திருவிழா

அ) சித்திரைத் திருவிழா ஆ) தீபத் திருவிழா

இ) மகாமகத் திருவிழா ஈ) ஆதிரைத் திருவிழா

19. பொருந்தாத இணையைக் கண்டறிக.

அ) ஓணம் – கேரளா

ஆ) புத்தகயா – பீகார்

இ) பொற்கோயில் – ஹரியானா

ஈ) அறுபடை வீடுகள் – தமிழ் நாடு

20. 'ஈத்' என்னும் அரபுச் சொல்லின் பொருள்

அ) நாள்காட்டி ஆ) நோன்பு இ) ஹாஜி ஈ) தடுத்து விடுவது

## பிரிவு – II

**எவையேனும் ஏழுவினாக்களுக்கு விடையளிக்க. 25 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.** 7×2=14

21. பண்பாட்டை வெளிப்படுத்தும் காரணிகள் யாவை ?

22. ஐந்திணைக்குரிய சிறுபொழுதுகள் யாவை ?

23. இந்தியாவில் சிந்துவெளி நாகரிகச் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்ட இடங்கள் யாவை ?

24. சிந்துவெளி மக்கள், திராவிடர்களாக இருக்க வேண்டும் என்று கூறியவர்கள் யாவர் ?

25. நீங்கள் நன்மாணாக்கராய்த் திகழ, என்னென்ன இயல்புகளைப் பெற்றிருக்கவேண்டும்? பட்டியலிடுக.

26. நன்னூலார் குறிப்பிடும் நூலின் மாண்புகள் யாவை ?

27. பல்லவர் கால ஓவியங்கள் இடம்பெற்றுள்ள இடங்கள் யாவை ?

28. அடியார்க்கு நல்லார் கூறும் இசை நூல்கள் யாவை ?

29. திருவாதிரை விழா கொண்டாடும் இடங்கள் யாவை ?

30. நாட்டார் தெய்வங்கள் யாவை ?

## பிரிவு – III

**எவையேனும் ஏழுவினாக்களுக்கு விடையளிக்க. 39 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்..** *7×3=21*

31. குடவோலை முறை என்றால் என்ன ?

32. ஐந்திணைக்குரிய உரிப்பொருள்கள் யாவை ?

33. சிந்துவெளி மக்கள் இறந்தவர்களின் உடலை எவ்வாறு அடக்கம் செய்தனர் ?

34. சிந்துவெளி மக்கள் மேற்கொண்ட வழிபாடுகள் யாவை ?

35. கடிமரம் என்றால் என்ன ?

36. 'போரில் அறநெறி காத்தவர் தமிழர்' என்பதைப் புறநானூற்றுவழி விளக்குக.

37. ஐவகைப் பண்கள் யாவை ?

38. குரவைக் கூத்து என்றால் என்ன ?

39. தமிழர் வாழ்வில் இசை எவ்வாறு இரண்டறக் கலந்திருந்தது?

40. தேர்த்திருவிழா சிறப்பாக நடைபெறும் இடங்கள் யாவை ?

## பிரிவு – IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** *7×5=35*

41. புறத்திணை – விளக்குக ?

(அல்லது)

பண்பாட்டிற்கும், நாகரிகத்திற்கும் உள்ள வேறுபாடுகளைப் பட்டியலிடுக.

42. 'சிந்துவெளி நாகரிகம், தமிழர் நாகரிகமே' – என்பதைச் சான்றுடன் விவரிக்க.

(அல்லது)

சிந்துவெளி மக்களின் வழிபாட்டு முறைகள் குறித்து எழுதுக.

43. கற்றலுக்கான வழிவகைகளாக நன்னூல் கூறுவனவற்றைத் தொகுத்தெழுதுக.

(அல்லது)

சீவக சிந்தாமணி கூறும் அறங்கள் யாவை ? விளக்குக.

44. தஞ்சாவூர் ஓவியங்கள் குறித்து நீவிர் அறிந்தவற்றை விளக்கி எழுதுக.

(அல்லது)

எவையேனும் இரண்டு தமிழக விளையாட்டுகளை விவரிக்க.

45. இயற்கை சார்ந்த விழாக்கள் யாவை? விளக்குக.

(அல்லது)

இஸ்லாம் சமய விழாக்களை விவரித்து எழுதுக.



Maathiri Vina Vidai.indd 193 03-02-2020 17:40:59

*46.* கம்பராமாயணம் கூறும் அறக்கருத்துகளை விவரிக்க.

(அல்லது)

தமிழக இசைக் கலைஞர்களைப் பற்றி விவரித்து எழுதுக.

*47.* பல்லவர்காலக் கட்டடக்கலைக்கும், சோழர்காலக் கட்டடக் கலைக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை ? விளக்குக.

(அல்லது)

திருவிழாக்கள் சமூக ஒற்றுமைக்கான வழி என்பதை விளக்குக ?

# மேல்நிலை முதலாமாண்டு
# மாதிரி வினாத்தாள் –II
# அறவியலும் இந்தியப்பண்பாடும்

**வகுப்பு : 11 ஆம் வகுப்பு**

**காலம்: 2.30 மணி** **மதிப்பெண்கள்: 90**

**அறிவுரைகள் :**

(1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளனவா என்பதைச் சரிபார்த்துக் கொள்க. அச்சுப்பதிவில் குறையிருப்பின், அதனைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்க வேண்டும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

## பிரிவு – I

**குறிப்பு :** (1) எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க. $20 \times 1 = 20$

(2) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

1. மனித வாழ்வு செழிக்க, உயர்ந்த எண்ணங்களால் செம்மைப்படுத்தப்பட வேண்டியது----.

அ) மனம் ஆ) ஆற்றல் இ) உடல் ஈ) அறிவு

2. மாந்தனது புறத்தோற்ற வளர்ச்சியின் செம்மையைக் குறிப்பது, -----------.

அ) பண்பாடு ஆ) நாகரிகம் இ) கலாச்சாரம் ஈ) சுற்றுச்சூழல்



Maathiri Vina Vidai.indd 194 03-02-2020 17:40:59

3. பொருந்தாத இணையைச் சுட்டிக்காட்டுக.

அ) தொல்காப்பியப் பொருளதிகாரம் – பழந்தமிழரின் அக, புற வாழ்க்கை

ஆ) எட்டுத்தொகை, பத்துப்பாட்டு – மக்களின் சமூக, பொருளதார வாழ்க்கை

இ) பதிற்றுப்பத்து – மன்னரின் போர்த்திறம், கொடைத்திறம்

ஈ) இரட்டைக் காப்பியங்கள் – வளையாபதி, குண்டலகேசி

4. பொருத்துக:

அ. பொருந்தாக் காதல் – 1) பொதுவியல் திணை

ஆ. ஒருதலைக் காமம் – 2) பாடாண்திணை

இ. ஆண் மகனது வீரம் – 3) பெருந்திணை

ஈ. ஒன்பது திணைகளில் கூறாதவை – 4) கைக்கிளை

அ) அ –4 ஆ – 3 இ – 2 ஈ – 1 ஆ) அ – 2 ஆ – 3 இ – 4 ஈ – 1

இ) அ – 3 ஆ – 4 இ – 2 ஈ – 1 ஈ) அ – 3 ஆ – 4 இ – 1 ஈ – 2

5. சர் ஜான் மார்ஷல், இந்தியாவின் பிற பகுதிகளுடன் தொடர்பு கொண்டிருந்த நகரங்கள் என உறுதிப்படுத்தியவை

1. மொகஞ்சதாரோ 2. ஹரப்பா 3. குந்தா 4. தானூர்

அ) 1, 2 சரியானவை ஆ) 3, 4 சரியானவை

இ) 2, 3 சரியானவை ஈ) 1, 4 சரியானவை

6. பண்டைய சிந்துவெளி பகுதியில் வழங்கப்பட்ட பெயர்களுள் எவையெவை தற்போதைய பாகிஸ்தானில், இன்றும் வழக்கத்தில் உள்ளன ?

1. ஆரணி 2. கொற்கை 3. சின்னமனூர் 4. மைலம்

அ) 1, 2, 3 சரியானவை ஆ) 1, 2, 3 தவறானவை

இ) 1, 2, 4 சரியானவை ஈ) 1, 2, 4 தவறானவை

7. மகா யோகியின் முத்திரையில் இடம்பெற்றிராத விலங்குகள்

1. காண்டாமிருகம், எருமை 2. யானை, புலி

3. புலி, கரடி 4. புலி, ஒட்டகம்

அ) 3, 4 சரியானவை ஆ) 1, 2, 3 சரியானவை

இ) 1, 2 சரியானவை ஈ) 1, 3, 4 சரியானவை



Maathiri Vina Vidai.indd 195 03-02-2020 17:40:59

8. கூற்று : "புலிபசித் தன்ன மெலிவி லுள்ளத்

துரனுடை யாளர் கேண்மை யோடு

இயைந்த வைகல் உளவா கியரோ"

**விளக்கம் :** எலியைப்போல் சிறிய முயற்சி உடையவரோடு நட்புக் கொள்வதினும் புலியைப் போன்ற வலிமையும் முயற்சியும் உடையவரும் நட்புக் கொள்வது சிறந்ததன்று.

அ) கூற்றுசரி, விளக்கம் சரி ஆ) கூற்று சரி, விளக்கம் தவறு

இ) கூற்று தவறு, விளக்கம் தவறு ஈ) கூற்று சரி, விளக்கம் பொருத்தமானதன்று

9. தமிழர்களின் வீட்டுவாசலில் அமைக்கப்பட்ட திண்ணை, எதற்கு அடையாளமாகக் கருதப்படுகிறது ?

அ) விருந்தோம்பல் ஆ) வீரம் இ) நட்பு ஈ) வாய்மை

10. பவணந்தி முனிவரால் இயற்றப்பட்ட நன்னூலில், இடம்பெற்றுள்ள இரு அதிகாரங்கள்

அ) எழுத்து, சொல் ஆ) எழுத்து, பொருள்

இ) சொல், பொருள் ஈ) சொல், யாப்பு

11. தமிழ்ப் பண்பாட்டையும் வாழ்க்கை முறையையும் கலைகளையும் சிறப்பாகப் பதிவு செய்த நூல்

அ) குண்டலகேசி ஆ) வளையாபதி இ) மணிமேகலை ஈ) சிலப்பதிகாரம்

12. தவறான கூற்றைச் சுட்டிக்காட்டுக.

மாடல மறையோன், கோவலனைப் புகழாத கூற்று எது ?

அ) கோவலன், யானையிடமிருந்து முதியவரைக்காத்த கருணை மறவன்.

ஆ) பிரிந்த கணவன் மனைவியைப் பெரும்பொருள் கொடுத்து, இணைத்த 'செல்லாச் செல்வன்'.

இ) தலைவனை இழந்து தடுமாறும் குடும்பத்தாரையும் அவர்தம் சுற்றத்தாரையும் அரவணைத்த 'இல்லோர் செம்மல்'

ஈ) கொண்ட பணியை முடிக்கும் தொண்டுள்ளம் கொண்ட " சொல்லின் செல்வன்"

13. பண்டைய நாளில் வாழ்ந்த இசைக்கலைஞர்கள் ஏழிசைத் திறங்களை இசைக்க பயன்படுத்திய கருவிகள்

1. குழல் 2. கஞ்சக்கருவி 3. தோல் கருவி 4. யாழ்

அ) 1, 4 சரியானவை ஆ) 1, 3 சரியானவை

இ) 1, 2 சரியானவை ஈ) 3,4 சரியானவை

14. சாளுவன் குப்பத்தில் உள்ள குகைக் கோயிலின் வெளிமுகப்பில், எந்த விலங்கின் முகம் காணப்படுகிறது?

அ) புலி ஆ) யானை இ) யாளி ஈ) மான்



Maathiri Vina Vidai.indd 196 03-02-2020 17:40:59

15. கோயில் விமானத்தில் உள்ள உறுப்புகளின் எண்ணிக்கை

அ) நான்கு ஆ) ஐந்து இ) மூன்று ஈ) ஆறு

16. பொருத்துக.

| | | |
|---|---|---|
| அ. ஆயிரங்கால் மண்டபம் அமைந்துள்ள இடம் | – | 1. நாமக்கல் கோயில் |
| ஆ. கட்டடக் கலையின் மணிமகுடமாகத் திகழும் கோயில் | – | 2. நெல்லையப்பர் கோயில் |
| இ. இசைத்தூண்கள் அமைந்துள்ள இடம் | – | 3. தஞ்சைப் பெரியகோயில் |
| ஈ. திருமாலின் பத்து அவதாரங்கள் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ள கோயில் | – | 4. மதுரை மீனாட்சியம்மன் கோயில் |

அ) அ – 4, ஆ – 3, இ –2, ஈ – 1 ஆ) அ – 3, ஆ – 2, இ –1, ஈ – 4

இ) அ – 2, ஆ – 1, இ –4, ஈ –3 ஈ) அ – 1, ஆ – 4, இ –3, ஈ – 2

17. பரவை நாச்சியாரை மணந்து கொண்டவர்

அ) மாணிக்கவாசகர் ஆ) சுந்தரர்

இ) திருநாவுக்கரசர் ஈ) திருஞானசம்பந்தர்

18. முல்லை நிலமக்கள், எம்மரத்தைத் தாய் தெய்வமாக வழிபட்டனர் ?

அ) அரசமரம் ஆ) ஆலமரம் இ) புன்னைமரம் ஈ) வேப்பமரம்

19. சித்திரசபை அமைந்துள்ள இடம்

அ) குற்றாலம் ஆ) திருவாலங்காடு இ) திருநெல்வேலி ஈ) சிதம்பரம்

20. பொருந்தாத கூற்றைக் கண்டறிக.

விஜய தசமி என்பது,

அ) வெற்றியைத் தருகின்ற நாள்

ஆ) கல்வியைத் தொடங்கும் நாள்

இ) கார்த்திகை மாதத்தில் வரும் நாள்

ஈ) செல்வத்தைத் தருகின்ற நாள்



Maathiri Vina Vidai.indd 197 03-02-2020 17:40:59

## பிரிவு – II

**எவையேனும் ஏழுவினாக்களுக்கு விடையளிக்க. 25 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.** *7×2=14*

21. மூன்றாம் தமிழ்ச்சங்க நூல்கள் யாவை ?
22. கால அடிப்படையில், சங்கங்களை எவ்வாறு வகைப்படுத்தினர் ?
23. சிந்துவெளி மக்கள் பயன்படுத்திய உலோகங்கள் யாவை ?
24. சிந்துவெளி மக்கள் வணிகத்தில் சிறப்புற்றிருந்த துறைமுகங்கள் யாவை ?
25. உண்மையான செல்வம் பற்றி நல்வேட்டனார் கூறுவது யாது ?
26. ' பொய்யாச் செந்நா' என்ற புறநானூற்றுப் பாடல் வாயிலாக நீவிர் அறிவன யாவை ?
27. பாண்டியர் காலக் குடைவரைக் கோயில்கள் மூன்றைக் குறிப்பிடுக.
28. சங்க காலக் கோயில்கள் அழிந்ததற்கான காரணம் யாது ?
29. எவ்வகை இயற்கைப் பொருள்களைப் பெரும்ஆற்றலாகக் கருதி மக்கள் வழிபட்டனர் ?
30. இந்திர விழா கொண்டாடுவதன் நோக்கம் யாது ?

## பிரிவு – III

**எவையேனும் ஏழுவினாக்களுக்கு விடையளிக்க. 37 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.** *7×3=21*

31. விருந்தினர் என்ற சொல்லின் பொருள் யாது ?
32. குறுநில மன்னர்களின் பெயர்களை குறிப்பிடுக ?
33. சிந்துவெளி மக்களின் கலையார்வத்தை வெளிப்படுத்தும் சான்றுகள் யாவை ?
34. சிந்துவெளி நாகரிகத்தின் அழிவிற்கான காரணங்கள் யாவை ?
35. சங்க காலப் பெண்பாற்புலவர்களுள் ஐவரின் பெயர்களைக் கூறுக ?
36. சங்ககால மன்னர்களின் மாண்புகள் யாவை ?
37. உலோகப் படிமங்கள் உருவாக்கப்பட்டதன் நோக்கம் யாது ?
38. அழகும் தொன்மையும் வாய்ந்த பல்லவர் காலக் கோயில் யாது ? யாரால் கட்டப்பட்டது ?
39. திருவிழாக்கள் எவற்றின் அடிப்படையில் கொண்டாடப்படுகின்றன ?
40. இந்திர விழாவின் வேறு பெயர்கள் யாவை ?



Maathiri Vina Vidai.indd 198 03-02-2020 17:40:59

## பிரிவு – IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** *7×5=35*

41. கடையெழு வள்ளல்களையும் அவர்களின் வள்ளல் தன்மைகளையும் விவரிக்க.

(அல்லது)

பழங்கால நாணயங்களைப் பற்றித் தொகுத்து எழுதுக.

42. சிந்துவெளி நாகரிகத்தில் பெண்கள் நிலை எவ்வாறு இருந்தது ? விளக்குக.

(அல்லது)

இந்தியப் பண்பாட்டு வளர்ச்சிக்கு சிந்துவெளி நாகரிகம் வழங்கியுள்ள கொடையை விளக்குக.

43. கற்றளிக்கும், குடைவரைக் கோயிலுக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை ?

(அல்லது)

விமானத்திற்கும் கோபுரத்திற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை ?

44. மன்னர்களைத் திருத்தும் கடமை, புலவர்களுக்கு உண்டு என்பதைச் சான்றுடன் விவரிக்க.

(அல்லது)

மன்னர்கள் அறநெறி வழுவாது அரசாட்சி நடத்தினர் என்பதை விளக்குக.

45. வளையாபதி கூறும் அறங்களைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

தீமையின் உருவங்களாகப் படைக்கப்பட்ட பாத்திரங்கள் யாவர் ? விளக்குக.

46. தஞ்சாவூர் ஓவியங்கள் பற்றி நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

தமிழரின் நாட்டுப்புறக் கலைகளுள் ஒன்றான சிலம்பாட்டத்தை விவரித்து எழுதுக.

47. தேர்த்திருவிழாவின் சிறப்பினை விளக்குக.

(அல்லது)

குருநானக்ஜெயந்தி சீக்கியர்களால் எவ்வாறு கொண்டாடப்படுகிறது? விளக்குக.

## கலைச்சொற்கள்

| | | |
|---|---|---|
| Aesthetics | - | அழகியல் |
| Air Pollution | - | காற்றுவெளி மாசுபாடு |
| Altruistic | - | பிறர் நலம் |
| Ambition | - | இலட்சியம் |
| Anarcha Feminism | - | தலைமை வேண்டாப் பெண்ணியம் |
| Ancestry | - | பரம்பரை |
| Anklet | - | காற்சிலம்பு / கொலுசு |
| Anti-Violence Feminism | - | வன்முறை எதிர்ப்புப் பெண்ணியம் |
| Appreciation | - | பாராட்டு |
| Archaeology | - | தொல்லியல் |
| Architecture | - | கட்டடக்கலை |
| Argument | - | வாதிடுதல் |
| Art Gallery | - | கலைக்கூடம் |
| Astrology | - | ஜோதிடம் |
| Astronomy | - | வானவியல் |
| Bamboo | - | மூங்கில் |
| Barn | - | தானியக் களஞ்சியம் |
| Barter / Commodity Exchange | - | பண்டமாற்று |
| Battle field | - | போர்க்களம் |
| Bitumen / Asphalt | - | நீலக்கீல் |
| Black Feminism | - | கருப்பினப் பெண்ணியம் |
| Blood Pollution | - | இரத்த மாசுபாடு |
| Bravery / Heroism / Valor / Bolder | - | வீரம் |
| Brotherhood | - | சகோதரத்துவம் |
| Cameos | - | பிரதிமைகள் |
| Canvas | - | கித்தான் |
| Cave Temple | - | குகைக்கோயில் |
| Character | - | பண்பு |
| Chariot | - | தேர் |
| Charity | - | தொண்டு |
| Circus | - | வேடிக்கை வட்டரங்கம் |
| Civic | - | குடிமை |
| Civilization | - | நாகரிகம் |



Kalaichorkal.indd 200 20-02-2020 17:12:42

| | | |
|---|---|---|
| Classic | - | செவ்வியல் |
| Committed | - | ஈடுபாடுமிக்க |
| Community Architect | - | சமுதாயச் சிற்பி |
| Compassion | - | இரக்கம் |
| Complex | - | சிக்கலான |
| Conduct | - | நடத்தை |
| Conduct / Morality / Discipline | - | ஒழுக்கம் |
| Conscience | - | மனசாட்சி |
| Conservative Feminism | - | மரபுவாதப் பெண்ணியம் |
| Consumer | - | நுகர்வோர் |
| Contrasts | - | வேற்றுமைகள் |
| Copper Coins | - | செப்பு நாணயங்கள் |
| Copper Plate | - | செப்புப் பட்டயம் |
| Courage | - | துணிவு |
| Cowards | - | கோழைகள் |
| Creative | - | ஆக்கத்திறன் |
| Crescent moon | - | பிறை நிலவு |
| Crew/Group | - | குழுவினர் |
| Crime | - | குற்றம் |
| Culture | - | பண்பாடு |
| Cultural Feminism | - | பண்பாட்டுப் பெண்ணியம் |
| Curved horn | - | வளைவான கொம்பு |
| Customary | - | பழக்கமான |
| Customs | - | சம்பிரதாயங்கள் |
| Dedicated | - | அர்ப்பணிப்பு |
| Definition | - | வரையறை |
| Destinations | - | இலக்குகள் |
| Determination | - | தீர்மானம் |
| Devotion | - | பக்தி |
| Dignity | - | கண்ணியம் |
| Disaster | - | பேரழிவு |
| Discrimination | - | பாகுபாடு |
| Discussions | - | விவாதங்கள் |
| Document | - | ஆவணம் |
| Domestic Business | - | உள்நாட்டு வணிகம் |
| Donation / Contribution | - | கொடை |
| Draft | - | வரைவு |
| Drill Pipe | - | துளைக்கருவி |
| Duties | - | கடமைகள் |

| | | |
|---|---|---|
| Ecology | - | சூழலியல் |
| Eco-Feminism | - | சூழல் பெண்ணியம் |
| Economic power | - | பொருளாதார சக்தி |
| Electronic Device | - | மின்னணு சாதனங்கள் |
| Emperors | - | பேரரசர்கள் |
| Entrepreneur | - | தொழில் முனைவோர் |
| Environment | - | சுற்றுச்சூழல் |
| Epic quintet / The five great epics | - | ஐம்பெருங்காப்பியங்கள் |
| Equality | - | சமத்துவம் |
| Ethics | - | அறவியல் |
| Excavation | - | அகழாய்வு |
| Exhausting | - | தீரக்கூடிய |
| External Life | - | புறவாழ்வு |
| Factory | - | தொழிற்கூடம் |
| Fasting | - | நோன்பு |
| Fatally / Fate | - | ஊழ்வினை |
| Feminist | - | பெண்ணுரிமையாளர் |
| Festival | - | திருவிழா |
| Field | - | கழனி |
| Fine Arts | - | கவின்கலைகள் |
| Flower garden / Paradise / Oasis | - | பாலைவனச்சோலை |
| Food Pollution | - | உணவு மாசுபாடு |
| Forecast | - | முன்னறிவிப்பு |
| Forest / Jungle | - | கானகம் |
| Geographical Code | - | புவியியல் குறியீடு |
| Golden Age | - | பொற்காலம் |
| Golden Temple | - | பொற்கோவில் |
| Good character | - | நற்பண்பு |
| Government Treasury | - | அரசுக் கருவூலம் |
| Granites | - | கருங்கற்கள் |
| Greatness / Honour / Goodness / Norms | - | மாண்புகள் |
| Habitual/Habit | - | பழக்கம் |
| Harmone Pollution | - | ஹார்மோன் மாசுபாடு |
| Heat Pollution | - | வெப்ப மாசுபாடு |
| Hero Stone | - | நடுகல் |
| Highs and lows | - | உயர்வு தாழ்வு |
| Hospitality | - | விருந்தோம்பல் |
| Human rights | - | மனித உரிமைகள் |



Kalaichorkal.indd 202 20-02-2020 17:12:42

| | | |
|---|---|---|
| Humanity | - | மனிதநேயம் |
| Hunting | - | வேட்டையாடுதல் |
| Hymn | - | பாசுரம் |
| Immortality of soul | - | உயிரின் இறவாத் தன்மை |
| Indoor Pollution | - | மனையக மாசுபாடு |
| In memory | - | நினைவாக |
| Inappropriate nature | - | தகாத குணம் |
| Independent power | - | சுதந்திர உரிமை |
| Indeterminism | - | தீர்மானிக்கப்படாத |
| Industry | - | தொழிற்சாலை |
| Information | - | தகவல் |
| Inoffensive | - | புண்படுத்தாமல் |
| Inscription | - | கல்வெட்டு |
| Inseparable | - | இணைபிரியாத |
| Instinctive | - | இயல்பூக்கம் |
| Integrated | - | ஒருங்கிணைந்த |
| Intellectually | - | அறிவுபூர்வமாக |
| Intention | - | உள்நோக்கம் |
| Internal Life | - | அகவாழ்வு |
| Involvement | - | ஈடுபாடு |
| Justice | - | நீதி |
| Labour | - | தொழிலாளர் |
| Legal | - | சட்டம் / நீதி |
| Liberal Feminism | - | தாராளவாதப் பெண்ணியம் |
| Light Pollution | - | ஒளி மாசுபாடு |
| Literature | - | இலக்கியம் |
| Livestock | - | கால்நடைகள் |
| Logic | - | அளவையியல் |
| Logo | - | சின்னம் |
| Lutes | - | யாழி |
| Maintain | - | பராமரித்தல் |
| Martyrdom | - | வீரமரணம் |
| Material Culture | - | புறப்பண்பாடு |
| Measurement | - | அளவீடு |
| Medical Insurance | - | மருத்துவக் காப்பீடு |
| Merciful | - | கருணையுள்ள |
| Metal Sculpture | - | உலோகச் சிற்பங்கள் |
| Mistake | - | பிழை |
| Monitors | - | கண்காணித்து |

| | | |
|---|---|---|
| Monolithic | - | ஒற்றைக்கல் |
| Mood | - | மனநிலை |
| Moral action | - | அறச்செயல் |
| Motive | - | உள்நோக்கு |
| Mural Art | - | சுவர் ஓவியம் |
| Musicians | - | இசைக் கலைஞர்கள் |
| National Unity | - | தேச ஒற்றுமை |
| Nemesis/Retributive | - | பழிக்குப்பழி |
| Neutral slack | - | நடுநிற்றல் |
| Non Material Culture | - | பொருள்சாராத பண்பாடு |
| Noise Pollution | - | இரைச்சல் மாசுபாடு |
| Norms | - | நெறிகள் |
| Numismatics | - | நாணயவியல் |
| Ore / Mineral | - | தாதுப்பொருள் |
| Origin | - | பூர்வீகம் |
| Ornament | - | அணிகலன் |
| Overseas Business | - | வெளிநாட்டு வணிகம் |
| Plastic Pollution | - | நெகிழி மாசுபாடு |
| Patriot | - | நாட்டுப்பற்றுமிக்கவர் |
| Pipal Tree | - | அரசமரம் |
| Penal | - | தண்டனைக்குரிய |
| Personality | - | ஆளுமை |
| Pesticide Pollution | - | பூச்சிக்கொல்லி மாசுபாடு |
| Philosophy | - | தத்துவம் |
| Physical property | - | உடற்பண்பு |
| Pictography | - | சித்திர எழுத்து |
| Pilgrimage | - | புனிதப்பயணம் |
| Pillars | - | தூண்கள் |
| Political | - | அரசியல் |
| Potency | - | ஆற்றல் |
| Prison | - | சிறை |
| Professional | - | தொழில்சார் |
| Proliferated | - | பல்கிப்பெருகி |
| Property | - | சொத்து |
| Psychology | - | உளவியல் |
| Psychotic behaviour | - | உளநடத்தை |
| Public Welfare | - | பொதுநலம் |
| Punishment | - | தண்டனை |
| Quantity | - | அளவு |



Kalaichorkal.indd 204 20-02-2020 17:12:42

| | | |
|---|---|---|
| Radical Feminism | - | தீவிரவாதப் பெண்ணியம் |
| Radioactive Pollution | - | கதிரியக்க மாசுபாடு |
| Rational | - | பகுத்தறிவு |
| Rebellion Feminism | - | அமைப்பை மறுக்கும் பெண்ணியம் |
| Reclamation | - | மீட்டல் |
| Reflective | - | மனச்சான்று |
| Reform | - | சீர்திருத்தம் |
| Reformative | - | சீர்திருத்த |
| Reformer | - | சீர்திருத்தவாதி |
| Reformist Feminism | - | சீர்திருத்தப் பெண்ணியம் |
| Regeneration | - | மீட்டுருவாக்கம் |
| Registrars | - | பதிவாளர்கள் |
| Rejuvenation | - | புத்துணர்வு |
| Relief Sculpture | - | புடைப்புச் சிற்பம் |
| Religion | - | மதம் |
| Religious Harmony | - | மத நல்லிணக்கம் |
| Renaissance | - | மறுமலர்ச்சி |
| Renunciation | - | துறத்தல் |
| Repetitive | - | தொடர்ந்து செய்தல் |
| Repository | - | களஞ்சியம் |
| Resolving | - | தீர்த்தல் |
| Revolution | - | புரட்சி |
| Revolutionary Feminism | - | புரட்சிகரப் பெண்ணியம் |
| Rights | - | உரிமைகள் |
| Rituals | - | சடங்குகள் |
| Rock Art | - | பாறை ஓவியம் |
| Roof | - | கூரை |
| Rules/Regulations | - | விதிகள் / கட்டுப்பாடுகள் |
| Sacrifice | - | தியாகம் |
| Savor | - | நறுமணம் |
| Sculpture | - | சிற்பம் |
| Seal | - | முத்திரை |
| Self determinism | - | சுயதீர்மானம் |
| Self respect | - | சுயமரியாதை |
| Self sympathy | - | சுய இரக்கம் |
| Selfishness | - | தன்னலம் |
| Sense of Humility | - | புலனடக்கம் |
| Service Industry | - | சேவைத்துறை |
| Simulations | - | பாவனைகள் / போலச் செய்தல் |



Kalaichorkal.indd 205 20-02-2020 17:12:42

| | | |
|---|---|---|
| Sin | - | பாவம் |
| Social Decay | - | சமூகச் சீரழிவு |
| Social Feminism | - | சமதர்மப் பெண்ணியம் |
| Social grassroots | - | சமூக அடித்தட்டு நிலைகள் |
| Social Inequality | - | சமூக ஏற்றத்தாழ்வுகள் |
| Social moral character | - | சமூக அறநெறிப்பண்பு |
| Social work | - | சமூகத்தொண்டு |
| Sodic Land | - | களர் நிலம் |
| Soil Pollultion | - | மண் மாசுபாடு |
| Solidarity | - | ஒருமைப்பாடு |
| Solid Waste Pollution | - | திடக்கழிவு மாசுபாடு |
| Sovereignty | - | இறையாண்மை |
| Spirituality | - | ஆன்மீகம் |
| Spiritual Feminism | - | ஆன்மீகப் பெண்ணியம் |
| Spy | - | ஒற்றன் |
| Standard | - | தரநிலை |
| Statue | - | தனிச் சிற்பம் |
| Stone Carving | - | கல்வேலைப்பாடு |
| Technique | - | நுட்பம் |
| Technology | - | தொழில்நுட்பம் |
| Tents | - | பந்தல்கள் |
| The legacy of community | - | சமுதாயத்தின் மரபு |
| Tiara | - | தலைப்பாகை |
| Traditional | - | தொன்றுதொட்டு |
| Treatment | - | சிகிச்சை |
| Truthfulness | - | வாய்மை |
| Uninterrupted / Unrestricted | - | தடையற்ற |
| University | - | பல்கலைக்கழகம் |
| Unreasonably | - | காரணமற்ற |
| Untouchability | - | தீண்டாமை |
| Valor | - | வீரம் |
| Values | - | விழுமியங்கள் |
| Vice | - | குற்றம் |
| Virtues | - | நல்லொழுக்கங்கள் |
| Voluntary | - | விரும்பியேற்றல் |
| Water Pollution | - | நீர் மாசுபாடு |
| Wisdom | - | ஞானம் |
| Worship | - | வழிபாடு |



Kalaichorkal.indd 206 20-02-2020 17:12:42

# பார்வை நூல்கள்

| வ.எண் | நூல்கள் | ஆசிரியர் பெயர் |
|---|---|---|
| 1. | அறவியல் ஓர் அறிமுகம் | வில்லியம் வில்லி<br>தமிழாக்கம்: கோ.மோ. காந்தி<br>தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்<br>(ஆவணப் பதிப்பு ஆகஸ்ட் 2017) |
| 2. | அறவியலும் பண்பாடும் | முனைவர் கா. அரங்கசாமி |
| 3. | இந்தியக்கலை வரலாறு (சிற்பக்கலை) | கோ. தங்கவேலு |
| 4. | இந்தியப் பண்டிகைகள் | குமரி. முருகேசன் |
| 5. | இந்து சமயத் தத்துவம் | T.M.P. மகாதேவன்,<br>தமிழாக்கம்: ஞா. இராஜாபகதூர் |
| 6. | இந்துப் பண்டிகைகளில் வரலாறும் வழிபாட்டு முறைகளும் | ஆசிரியர் குழு - இராமநாதன் பதிப்பகம் |
| 7. | இந்துமத இணைப்பு விளக்கம் | மகாவித்துவான் கே. ஆறுமுகநாவலர் |
| 8. | உரைநடைத் தமிழில் ஐம்பெருங்காப்பியங்கள் | வித்துவான் நாராணய வேலுப்பிள்ளை |
| 9. | ஐம்பெருங்காப்பியங்களுள் மூலமும் தெளிவும் | ச.வே. சுப்பிரமணியன் |
| 10. | கம்பராமாயணம் | அ.ச. ஞானசம்பந்தன் |
| 11. | கீழடி மதுரை – சங்ககால தமிழர் நாகரிகம் | க.த. காந்திராஜன் |
| 12. | சங்க இலக்கியம் (சமயம், வழிபாடு, அரசு, சமூகம்) | முனைவர் அ. பாண்டுரங்கன்,<br>நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிட் – 2016. |
| 13. | சங்ககாலம் – வாழ்வியல் | தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்<br>(ஆவணப் பதிப்பு ஆகஸ்ட் 2017) |
| 14. | சங்ககால இனக்குழுச் சமுதாயமும் அரசு உருவாக்கமும் | பெ. மாதையன், பாவை பப்ளிகேஷன்ஸ்,<br>சென்னை –2004. |
| 15. | சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடுகள் | பி. கிஸ்பர்ட்,<br>தமிழாக்கம்: ஜே. நாராயணன்<br>தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்,<br>(ஆவணப் பதிப்பு ஆகஸ்ட் 2017) |
| 16. | சிந்துவெளி எழுத்து | வி. நட்ராஜ் |
| 17. | சிந்துவெளிப் பண்பாட்டின் திராவிட அடித்தளம் | ஆர். பாலகிருஷ்ணன் |
| 18. | சீவகசிந்தாமணி ஓர் ஒப்பற்ற காப்பியம் | பேராசிரியர்ஜெ. ஸ்ரீசந்திரன் |
| 19. | சீவகசிந்தாமணி – திருத்தக்கதேவர் இயற்றிய சீவகசிந்தாமணி மூலமும் நச்சினார்க்கினியருரையும் | தமிழ்ப்பல்கலைகழகம், தஞ்சாவூர் |
| 20. | சுற்றுச்சூழல் | தி.து. பாலசுப்பிரமணியன்,<br>வேங்கடம் வெளியீடு, சென்னை – 2005 |
| 21. | சூழல் அறிவியல் | முனைவர் S. ஜான் பிரிட்டோ<br>திருச்சி – 2004. |
| 22. | சைவமும் வைணவமும் | அருள்மிகு. சங்கரநாரயணன் |
| 23. | சோழர் வரலாறு | டாக்டர் மா. இராசமாணிக்கனார் |
| 24. | தமிழ் இலக்கியங்களில் மானுட மேம்பாட்டுச் சிந்தனைகள் | பதிப்பாசிரியர்<br>முனைவர் கலை. இராம. வெங்கடேசன்<br>முனைவர் மு. இராஜேந்திரன்<br>முனைவர் கோ. விஜய ராகவன்<br>முனைவர் நாஞ்சில். நீல. மாதவன்<br>ஆரஞ்சு பப்ளிகேஷன்ஸ், காஞ்சிபுரம் – 2017. |

| வ.எண் | நூல்கள் | ஆசிரியர் பெயர் |
|---|---|---|
| 25. | தமிழ் இலக்கிய வரலாறு | பேராசிரியர் மது.ச. விமலானந்தம் |
| 26. | தமிழ் இலக்கிய வரலாறு | மு. வரதராசன் |
| 27. | தமிழ் இலக்கிய வரலாறு | முனைவர் ச. வே. சுப்பிரமணியன் |
| 28. | தமிழ்க் கல்வெட்டுக்களில் அறவியல் கோட்பாடுகள் | முனைவர் கா. அரங்கசாமி, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம் -2013. |
| 29. | தமிழ்நாட்டு வரலாறு | தமிழ்நாட்டு வரலாற்றுக் குழு |
| 30. | தமிழ்நாட்டு வரலாறு – சங்ககாலம், வாழ்வியியல் | தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் |
| 31. | தமிழக நாகரிகமும் பண்பாடும் | முனைவர் அ. தட்சிணாமூர்த்தி |
| 32. | தமிழக வரலாறு மக்களும் பண்பாடும் | டாக்டர் கே.கே. பிள்ளை |
| 33. | தமிழக வரலாறும் பண்பாடும் | வேதி. செல்வம் |
| 34. | தமிழக வரலாறும் பண்பாடும் | டாக்டர் அ. சுவாமிநாதன் |
| 35. | தமிழர் கலையும் பண்பாடும் | அ.கா. பெருமாள் |
| 36. | தமிழர் சமயம் தமிழர் வேதம், தமிழகத்துக் கோயில்கள் | யு. சுப்பிரமணியன் |
| 37. | தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்கள் | முனைவர் ச.வே. சுப்ரமணியன் |
| 38. | தமிழர் நாட்டு விளையாட்டுகள் | இரா. பாலசுப்ரமணியம் |
| 39. | தமிழர் வளர்த்த அழகுக் கலைகள் | மயிலை சீனிவெங்கடசாமி |
| 40. | தமிழிலக்கியத்தில் மனித நேயம் | முனைவர் சா. கிருஷ்ணமூர்த்தி<br>முனைவர் சூ. நிர்மலா தேவி<br>உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் – 2005. |
| 41. | தமிழும் பிறபண்பாடும் | தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் |
| 42. | திருக்குறள் | பரிமேழலகர் உரை |
| 43. | திருக்கோயில் அமைப்பும் திருவுருவ அமைதியும் | முனைவர் அம்பை மணிவண்ணன் |
| 44. | தென்னிந்திய திருவிழாக்கள் | பி.ஜி. ஜெகதீச அய்யர் |
| 45. | நடுகற்கள் | ச. கிருஷ்ணமூர்த்தி |
| 46. | பரதக்கலை | டாக்டர் பத்மா சுப்ரமணியம் |
| 47. | பன்னிரு திருமுறை வரலாறு, (முதல் ஏழு திருமுறைகள்) | வித்துவான் வெள்ளைவாரணன் |
| 48. | புதிய தமிழ் இலக்கிய வரலாறு, தொகுதி- I, II, III இடைக்கால இலக்கியம் | சிற்பி. பாலசுப்ரமணியம், நீலபத்மநாபன் |
| 49. | பெண்ணியம் (இந்தியப் பெண்ணியவாதிகள்) | பேராசிரியர் இரா. பிரேமா, |
| 50. | மதநல்லிணக்கம் | டாக்டர் மு. பெரியகருப்பு |
| 51. | மனித வாழ்க்கையும் காந்தியடிகளும் | திரு. வி. கலியாணசுந்தரனார்<br>ஷாண்வி புக்ஸ். பெங்களூரு – 2015. |

# மேல்நிலை முதலாம் ஆண்டு–அறவியலும் இந்தியப் பண்பாடும்
## ஆக்கம்

### மேலாய்வாளர் குழு

முனைவர் மு. **சுதந்திரமுத்து,**
இணைப்பேராசிரியர் (ப.நி)
மாநிலக்கல்லூரி, சென்னை .

முனைவர் **பொன். குமார்,**
இணை இயக்குநர் (பாடத்திட்டம்)
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும்
பயிற்சி நிறுவனம், சென்னை.

முனைவர் **கமலா கிருஷ்ணமூர்த்தி,**
இணைப்பேராசிரியர் (ப.நி)
அரசினர் ஆடவர் கலைக் கல்லூரி, நந்தனம், சென்னை.

திரு. **மூ. அப்பணசாமி,**
ஆலோசகர், தமிழ்நாடு பாடநூல் மற்றும்
.கல்வியியல் பணிகள் கழகம், சென்னை

முனைவர் **இரா. இராமன்**
இணைப் பேராசிரியர்
.அரசினர் ஆடவர் கலைக் கல்லூரி, நந்தனம், சென்னை

முனைவர் **க. பலராமன்**
உதவிப் பேராசிரியர்
.அரசினர் ஆடவர் கலைக் கல்லூரி, நந்தனம், சென்னை

திருமதி **பி. அமுல்சோபியா**
உதவிப் பேராசிரியர்
.ஸ்ரீமாலோலன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மதுராந்தகம்

### பாடநூல் வல்லுநர் குழு

முனைவர் **சீ. தங்கராசு,**
இணைப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்,
இந்தியப் பண்பாடு மற்றும் சுற்றுலாவியல் துறை,
அரசினர் கலைக்கல்லூரி (தன்னாட்சி) – கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.

முனைவர் **பா. ஷீலா**
கலைப்புலத்தலைவர்,
பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்,
சிற்பத்துறை, தமிழ்ப்பல்கலைக்கழகம் – தஞ்சாவூர்.

முனைவர் **சி. ஸ்ரீராஜா,**
உதவிப் பேராசிரியர் மற்றும் இந்தியப் பண்பாட்டுத் துறைத்தவைர்,
அருள்மிகு பழனி ஆண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக்கல்லூரி,
பழனி, திண்டுக்கல் மாவட்டம்.

முனைவர் **இர. இந்திரா,**
உதவிப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்.
தத்துவம் சமயம் மற்றும் பண்பாட்டுத் துறை,
பூம்புகார் கல்லூரி (தன்னாட்சி), மேலையூர், நாகப்பட்டிணம் மாவட்டம்.

முனைவர் **இரா. பாலசுப்ரமணியன்,**
உதவிப்பேராசிரியர், இந்தியப்பண்பாட்டுத் துறை,
அருள்மிகு பழனி ஆண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக்கல்லூரி,
பழனி, திண்டுக்கல் மாவட்டம்.

முனைவர் **மு. பரணி,**
உதவிப்பேராசிரியர்,
தத்துவத் துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
சிதம்பரம், கடலூர் மாவட்டம்.

### வரைபடம்

க.த. காந்திராஜன், ஆய்வு வளமையர்
தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை.
சு.வெ. கோகுலகிருஷ்ணன், சென்னை.
ச. கௌதம், சென்னை.
தனஸ் தீபக் ராஜன், சென்னை.
நளன் நான்சி ராஜன், சென்னை.

### வரைகலை & வடிவமைப்பு

விஜயசாரதி, ரகு, சி.சுகன்யா

### In-House - QC

மனோகர் இராதாகிருஷ்ணன்
கோபு இராசுவேல்
ஜெரால்டு வில்சன். கி
ப அருண் காமராஜ்

### அட்டை வடிவமைப்பு

கதிர் ஆறுமுகம்

### ஒருங்கிணைப்பு

ரமேஷ் முனிசாமி

### தட்டச்சர்

அ. கணேஷ்
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், குமுளூர், திருச்சி மாவட்டம்.

ஆ. அஸ்வினி
போளூர், திருவண்ணாமலை மாவட்டம்.

### பாடநூல் உருவாக்கக் குழு

**இரா. ஜெனமேஜெயன்,**
முதுகலை ஆசிரியர், அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி,
பொன்னேரி, திருவள்ளூர் மாவட்டம்.

**கி. அன்பழகன்,**
முதுகலை ஆசிரியர், அரசினர் மேல்நிலைப்பள்ளி,
பேரளம், திருவாரூர் மாவட்டம்.

**கோ. பாக்கியலட்சுமி,**
முதுகலை ஆசிரியர், வ.உ.சி. அரசினர் மேல்நிலைப்பள்ளி,
ஒட்டப்பிடாரம், தூத்துக்குடி மாவட்டம்.

**மு. பழனிச்சாமி,**
முதுகலை ஆசிரியர், அரசினர் மேல்நிலைப்பள்ளி,
கிணத்துக்கடவு, கோயம்புத்தூர் மாவட்டம்.

**இரா. கண்ணன்,**
முதுகலை ஆசிரியர், அரசினர் மகளிர் மேல்நிலைப்பள்ளி,
செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டம்.

**கு. கந்தையா,**
முதுகலை ஆசிரியர், அரசினர் மேல்நிலைப்பள்ளி,
கழுகுமலை, தூத்துக்குடி மாவட்டம்.

**மா. இராதாகிருஷ்ணன்,**
முதுகலை ஆசிரியர், எஸ். ஆர். அரசினர் மேல்நிலைப்பள்ளி,
நாங்குநேரி, திருநெல்வேலி மாவட்டம்.

**கோ. ஜெகநாதன்,**
முதுகலை ஆசிரியர், இந்து மேல்நிலைப்பள்ளி,
திருவல்லிக்கேணி, சென்னை.

**தொ. பால்ராஜ்,**
முதுகலை ஆசிரியர், அரசினர் மேல்நிலைப்பள்ளி,
மகூப்பாளையம், மதுரை மாவட்டம்.

**சு. சந்திரன்,**
முதுகலை ஆசிரியர்,
ஆவிச்சி மேல்நிலைப்பள்ளி, சாலிகிராமம், சென்னை.

### வல்லுநர் & ஒருங்கிணைப்பாளர்

முனைவர் **நா. அருள்முருகன்,** துணை இயக்குநர்,
தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், சென்னை.

### ஒருங்கிணைப்பு

**ந. இராமலிங்கம்,** உதவிப் பேராசிரியர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை.

### பணிவாய்ப்பு வழிகாட்டல்

முனைவர் **தே. சங்கர சரவணன்,** துணை இயக்குநர்,
தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், சென்னை.

### கணினித் தொழில்நுட்பம்

**த. ரேவதி,** பட்டதாரி ஆசிரியர்,
ந.உ.நி.ப. இராஜகோபாலபுரம், புதுக்கோட்டை.

**பொ. சின்னத்துரை,**
இடைநிலை ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி,
டி. சானார்பாளையம், திருப்பூர் மாவட்டம்

### ஒருங்கிணைப்பு உதவி

**இரா. கீதாராணி,** பட்டதாரி ஆசிரியர்,
ஊ. ஒ. ந. நி. பள்ளி, பெரிய வேட்டுவபாளையம், பெருந்துறை , ஈரோடு

### நூலக வளம்

**இரா. ஜெயந்தி,** நூலகர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை.

### விரைவுக் குறியீடு மேலாண்மைக் குழு

**இரா. ஜெகநாதன்**
இடைநிலை ஆசிரியர்
ஊ.ஒ.ந.நி. பள்ளி, கணேசபுரம்– போளூர், திருவண்ணாமலை மாவட்டம்.

**ந. ஜெகன்**
பட்டதாரி ஆசிரியர்,
அ.ஆ.மே.நி. பள்ளி, உத்திரமேரூர், காஞ்சிபுரம் மாவட்டம்.

**ஜே.எப். பால் எட்வின் ராய்**
பட்டதாரி ஆசிரியர்,
ஊ.ஒ.ந.நி. பள்ளி, இராக்கிப்பட்டி, சேலம் மாவட்டம்.

இந்நூல் 80 ஜி.எஸ்.எம் எலிகண்ட் மேப்லித்தோ தாளில் அச்சிடப்பட்டுள்ளது
ஆப்செட் முறையில் அச்சிட்டோர்:



11th Ethics Tamil_Authors List.indd 209 19-02-2020 18:11:43

குறிப்புகள்



11th Ethics Tamil_Authors List.indd 210 19-02-2020 18:11:43